பக்கங்கள் : பன்னிரண்டு + II

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 22 புதன்கிழமை (06.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 252

# இந்திய - இலங்கைப் பொருளாதார ஒப்பந்தத்துக்கு கூட்டமைப்பு ஆதரவு

## கைச்சாத்திடக் கோருகிறார் சம்பந்தன்

கொழும்பு, ஓகஸ்ட், 06

இந்தியாவுடன் இலங்கை அரசு செய்வதற்குத் திட்டமிட்டிருக்கும் விசால பொருளாதார பங்குதாரர் ஒப்பந்தத்திற்கு (Comprehensive Economic Partnership Agreement- CEPA) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது.

"இந்த ஒப்பந்தத்தை எதிர்ப்பவர்களை ஓரத்தில் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அரசு இதில் கைச் சாத்திட வேண்டும்" - என்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற இந்த ஒப்பந்தம் தொடர்பான சபை ஒத்தி வைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே சம்பந்தன் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கையில் உள்ள தலைவர்கள் சமா தானத்தையோ அல்லது பொருளாதார

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் வெள்ளாங்குளம் பகுதியில் படைப்பொருள்கள் மீட்பு

கொழும்பு, ஓக. 06

மன்னார் வெள்ளாங்குளம் நோக்கி கடந்த ஞாயிற்றுக்கிழமை படையினர் மேற்கொண்ட முன்நகர்வுக்கு எதிராக விடுதலைப்புலிகள் கடுமையான எதிர்த் தாக்குதலை நடத்தினர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இத்தாக்குதலின்போது படைத்தரப் பைச் சேர்ந்தவரின் சடலங்கள் சிலவற்றை அவர் கள் மீட்டுள்ளனர். அத்துடன் படைப்பொருள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையின் முதலாவது கட்டம் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஓக. 05

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை இன்று முதல் நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகின்றது.

இந்தப் பரீட்சை இன்று 6ஆம் திகதி ஆரம்பமாகி அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை இடம்பெறும் என பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரி வித்துள்ளார்.

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகா ணத் தேர்தலை முன்னிட்டு இந்தப் பரீட் சையைஇரண்டுகட்டங்களாக நடத்துவதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் இன்று ஆரம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாவட்ட நிர்வாகம் குறித்த கருத்துக்களை ஒளிவுமறைவின்றி தெரியப்படுத்தலாம்

### குண்டுப் புரளியால் உத்தியோகத்தர் மனவேதனை

யாழ்ப்பாணம், ஓக 06

நேற்று முன்தினம்திங்கட்கிழமை யாழ். செயலகத்தில் வெடிகுண்டு வைக்கப்பட் டிருப்பதாக கிளப்பப்பட்ட புரளி குறித்து, செயலக உத்தியோகத்தர்கள் அதிர்ச்சியும் வேதனையும் வெளியிட்டுள்ளனர்.

மாவட்டம் நிர்வாகம் தொடர்பில் கருத் துக்களை வெளியிட விரும்புவோர் தமது - கருத்துக்களை நேரடியாகவோ, எழுத்து மூலமாகவோ ஒளிவுமறைவின்றி தெரியப் படுத்தலாம் என்றும் அவர்கள் குறிப்பிட் டுள்ளனர்.

இது தொடர்பாக, மாவட்ட செயலக உத்தியோதர்கள் நேற்று வெளியிட்ட பத் திரிகை அறிக்கையில் இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

04.08.2008 ஆம் திகதியன்று மாவட்ட செயலகத்திற்கு கிடைத்த அனாமதேய

(12 ஆம் பக்கம் பார்க்க)



நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழா இன்று கொடியேற்றத் துடன் ஆரம்பமாகிறது. கொடியேற்றம் காலை பத்து மணிக்கு இடம்பெறும்.

நல்லூர் பெருந் திருவிழாவையொட்டி ஆலயச் சூழலில் வழமை போன்று யாழ்மாநகரசபை அடியார்களின் நலனை கருத்தில் கொண்டு சகல வசதிகளை யும் செய்துள்ளது



நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் - நல்ல மயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி.

- யோகர் சுவாமிகள்

## நல்லூர் ஆலயத் திருவிழாவுக்காக ஊரடங்கு 1/2 மணி நேரம் குறைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 06

நல்லூர் முருகன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு யாழ். குடாநாட்டில் ஊரடங்குச் சட்ட நேரத்தினை அரை மணித்தியாலத்தால் குறைப்பதற்கு படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர் என தேசிய பாது காப்பு ஊடக மத்திய நிலையம் அறிவித்திருக்கின்றது.

இதனடிப்படையில் இதுவரை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாலமோட்டையில் இரு தரப்பும் சமர் திங்களன்று 10 இராணுவத்தினர் பலி

வவுனியா, ஓக 06

வவுனியாவின் முன்னரங்க நிலையான பாலமோட்டைப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் திங் கட்கிழமைநடைபெற்ற கடுஞ் சமரில் 10 படையினர் கொல்லப்பட்டனர். 11 பேர் வரை படுகாயமடைந்தனர்.

பாலமோட்டை ஊடாக நேற்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

புலமைப்பரிசில் பரீட்சை விசேட மாதிரி வினாத்தாள்

கொழும்பு மாவட்டம்

பிரபல ஆசிரியர்

திரு.து.திலீப்குமார்

தயாரித்தது

உள்ளே I + II ஆம் பக்கங்களில்

## துப்பாக்கிச்சூட்டில் சிப்பாய் பலி கல்லடியில் நேற்று சம்பவம்

மட்டக்களப்பு, கல்லடிப்பாலத்துக்கு அருகில் உள்ள இராணுவ தலைமையகத் திற்கு 200 மீற்றர் தொலைவில், சரவணா வீதியில், ரோந்து நடவடிக்கையில் ஈடுபட் டிருந்த இராணுவத்தினர் மீது நேற்று பிற் பகல் 1.15 மணியளவில் மோட்டார் சைக்கி ளில் வந்த ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தை விடு தலைப் புலிகளே மேற்கொண்டனர் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளாங்குளத்தில் விமானத் தாக்குதல்

கொழும்பு, ஓக. 06

மன்னார், வெள்ளாங்குளம் வடக்குப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் விமானப்படையின் எம்.ஐ.24 ரக ஹெலிகொப்டர் குண்டுவீசித் தாக்கியிருக்கின்றது என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தோருக்கான உதவிகளை மேலும் அதிகரிக்குக

### கிளிநொச்சி அரச அதிபர் கோரிக்கை

கிளிநொச்சி, ஓக. 06

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உதவி நிறுவனங்கள் வழங்குகின்ற உதவி களை பன்மடங்காக அதிகரிக்கவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜூலையில் 38 பேர் கொலை 42 பேரைக் காணவில்லை

### வடகிழக்கு மனித உரிமை செயலகம் அறிக்கை

வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் தனது மாதாந்த அறிக்கையில் ஜூலை மாதத்தில் யாழ்ப்பாணத்திலேயே அதிகமானவர்கள் கொல்லப்பட்டதாகவும் கொழும்பில் அதிகமானோர் காணாமல் போயிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

கடந்த மாதங்களைவிட ஜூலை மாதத்தில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதாக்வும், எனினும் 38 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் அந்த அலுவலகத்தின் புள்ளிவிபரத்தகவல்களின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 2 அனல் மின்நிலையங்களை சம்பூரில் நிறுவ அரசு திட்டம்

கொழும்பு, ஓக. 06

இந்தியாவுடன் இணைந்து திருகோணமலை சம்பூரில் இரண்டு அனல் மின் நிலையங்களை அமைக்க அரசு தீர்மானமெடுத்திருக்கிறது என்றும் அதற்கான ஒப்பந்தம் விரைவில் இந்தியாவுடன் செய்து கொள்ளப்படும் என்றும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் ஜோன் செனவிரட்ண நேற்று நாடாளுமன்றில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மனித உரிமை மீறல் அதிகளவில் உள்ள நாடுகளை கண்டிக்கத் தவறிவிட்டார் லூயிஸ் ஆர்பர் அம்மையார்

## 'யூ.என். வோர்ச்' அமைப்புக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 06

ஐ.நா.சபையின் மனித உரிமை விவகாரங்களுக்கான முன்னாள் ஆணையாளர் லூயிஸ்ஆர்பர் அம்மையார் தமது பதவிக் காலத்தின்போது மனித உரிமை மீறல்கள் பாரிய அளவில் இடம்பெறும் நாடுகள் குறித்து உரியமுறையில் செயற்படத் தவறிவிட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டி ருக்கிறது.

ஐ.நா.வின் ஆலோசனைகள் கண்காணிப்பகமான 'யூ.என். வோர்ச்' என்ற அமைப்பு வெளியிட்ட அறிக்கை ஒன்றி லேயே இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

ஐ.நா. சபையின் செல்வாக்கைப் பெற்றுள்ள நாடுகளில் இடம்பெற்ற மனிதஉரிமைகள் தொடர்பில் ஆர்பர் அம்மையார் உரிய விதத்தில் செயற்படவில்லை.

ஐ.நா. சபையின் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் சீனா, ரஷ்யா போன்ற நாடுகளின் மனித உரிமைகளின் நிலை குறித்து முன்னாள் ஆணையாளர் போதிய அக்கறை கொள்ளவில்லை. அதேபோல் மத்திய கிழக்கு நாடுகள் மீதும் அவர் அக்கறை செலுத்தவில்லை - என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

எதிர்வரும் காலங்களில் மனித உரிமைகள் ஆணையாளர் பதவி வகிப்பவர்களுக்கு உரிய புரிந்துணர்வை மேம்படுத்தும் வகையிலேயே இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு காலம் வரை ஆணையாளராகக் கடமையாற்றிய ஆர்பர் அம்மையார் தமது பதவிக்காலத்தின்போது 39 நாடுகளை மாத்திரமே விமர்சித்திருந் தார். இவரால் பெருமளவில் விமர்சிக்கப்பட்ட 29 நாடுகளில் இலங்கையும் அடங்குகிறது.

யூ.என்.வோர்ச்சின், இந்த அறிக்கையை நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. சபையிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் குறிப்பிடபட்டிருக்கின்றது.
(சி)

# இன்றைய போட்டிகள்

வலி.வடக்கு, ஓக.6

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம், பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையே 13 ஆவது ஆண்டாக வர்த்தக வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தி வரும் லீக் முறையிலான தாச்சிச்சுற்றுப் போட்டியில் -

இன்று பி.ப. 4.30 மணிக்கு தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழகம் எதிர் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம்.

அராலி வடக்கு ஐக்கிய விளையாட்டுக்கழகம், வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தும் ஏழுபேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட போட்டிகள் இன்று புதன் கிழமை பி.ப. 3 மணி தொடக்கம் அராலி ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இன்றைய போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் பாரதி விளையாட்டுக்கழகம்.
* தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் எதிர் காக்கைதீவு ஆதவன் விளையாட்டுக்கழகம். (அ-86)

* * *

## பருத்தித்துறையில்

மந்திகை, ஓக.6

மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் - இன்று புதன் கிழமை பி.ப. 3.30 மணிக்கு - கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழகமும் -

பிற்பகல் 4.30 மணிக்கு வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட் டுக்கழகமும் மோதுகின்றன.

நேற்றைய போட்டியில் வல்வெட்டித் துறை ஆதிசக்தி விளையட்டுக்கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையட்டுக்கழகம் மோதி வெற்றி பெற்றது.

இன்னொரு போட்டியில் கரவெட்டி கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதி வெற்றிபெற்றது.
(அ-218)




# Top World

Communication & Browsing Center

நல்லூர் கந்தன் பருவகால உற்சவத்தை முன்னிட்டு

வெளிநாட்டு அழைப்புகள் 04/=

கனடா, அமெரிக்கா, மற்றும் ஐரோப்பா

⇨ இந்தியா 10/= ⇨ அரபு நாடுகள் 30/=

⇨ மலேசியா (கையடக்க தொலைபேசி) 08/=

⇨ போட்டோகொப்பி ⇨ பக்ஸ் ⇨ ஈமெயில்
⇨ ஸ்கானிங் ⇨ பிரிண்டிங் ⇨ CDறைற்றிங்
⇨ லமினேற்றிங் ⇨ டிசைனிங் ⇨ றைப்பிங்
⇨ தொலைபேசி அட்டைகள் ⇨ இன்ரநெற் கோல் (Browsing)

768 B, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
topword&2008@smal.com T.P.222 8605, 222 8387


# மரண அறிவித்தல்கள்

## திரு சிவசம்பு தியாகராஜா



2ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற அரசாங்க வைத்தியர் (R.M.P) சிவசம்பு தியாகராஜா திங்கள நள்ளிரவு (04.08.2008) அன்று காலமாகி, செவ்வாய் (05.08.2008) அன்று பி.ப. 3 மணிக்கு வவுனியாவில் அவரது இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்பட்டார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தொடர்பு: 59/1, 3ஆம் ஒழுங்கை, வெளிக்குளம், வவுனியா.
தொ.பே. 0242223395
சி.பாலகிருஷ்ணன் (சகோதரன்)
2ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

## பாலசிங்கம் மனோன்மணி



புளியங்கூடல், ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் பிறவுன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் மனோன்மணி நேற்று (05.08.2008) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - வள்ளியம்மை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - புவனேஸ்வரி தம்பதியரின் மருமகளும், நாகலிங்கம் பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, பொன்னுத்துரை, அன்னம்மா, முத்தம்மா மற்றும் கனகரட்ணம், தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், அன்னலட்சுமி, தர்மலிங்கம், பொன்னுச்சாமி, சீவரத்தினம், பராசக்தி மற்றும் கௌரீஸ்வரி, திலகவதி, அப்புலிங்கம், இரத்தினபூபதி, கமலாதேவி, மகாலிங்கம், அன்னலட்சுமி ஆகியோரின் மைத்துனியும், நிர்மலாவின் அன்புத் தாயா ரும் காந்தரூபனின் அன்பு மாமியாரும் தனுஷாந், தனுஷீகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (6.08.2008) புதன் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மலர் வாசா,
211, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். (76993)
தகவல்:
காந்தரூபன் (மருமகன்)

## இளையதம்பி பாலசிங்கம்
### (முன்னாள் பதில் உதவி அரசாங்க அதிபர், சங்கானை)

அரசடி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இளையதம்பி பாலசிங்கம் (05.08.2008) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - விசாலாட்சி தம்பதியரின் புதல்வனும், யோகாம்பிகையின் அன்புச் சகோதரனும், வட்டு மேற்கு சின்னத்தம்பி (F.M.S.PENSIONER) வள்ளியம்மை தம்பதியரின் அருமை மருமகனும், நாகரத்தினம்மா (ஓய்வு பெற்ற விஞ்ஞான ஆசிரியை, யாழ்ப்பாணக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் பத்மராஜா, பத்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மராஜா சிவாஜினியின் (பண்டத்தரிப்பு பெண்கள் உயர் தர பாடசாலை) அருமை மாமனாரும், விதுஷன், கஜலக்ஷன், ஷயந்தவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கியைகள் இன்று (06.08.2008) புதன்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று 11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துத்துறை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி,
வட்டுக்கோட்டை. (A)
தகவல்:
மனைவி, மக்கள்.

# மரண அறிவித்தல் மேலதிக தகவல்

## திருமதி வேதநாயகி கனகசபாபதி

நேற்றைய உதயன் பத்திரிகையில் (05.08.2008) எம்மால் விடுக்கப்பட்ட சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி வேதநாயகி கனகசபாபதி என்பவரது மரண அறிவித்தலில், காலஞ்சென்றவரின் சகோதரர் பூ.சுந்தரலிங்கம் (கனடா) என்ற விவரம் தவறுதலாக விடுபட்டு விட்டது. தயவுசெய்து அத்தகவலையும் சேர்த்து வாசிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சி.சிவராம்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி.
(சி/554042)


# திறப்பு விழா

## குடும்ப மருத்துவ நிறுவனம்
125,பிரதான வீதி, யாழ்ப்பாணம்

மேற்படி மருத்துவ நிறுவனம் இன்று (06.08.2008) புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்.மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் Dr.K.சிவபாலன் அவர்களால் திறந்து வைக்கப்படும்.

மேற்படி மருத்துவ நிறுவனத்தில் தினமும் மாலை 4மணி தொடக்கம் 6மணிவரை Dr.சி.யமுனாநந்தா MBBS. DTCD அவர்களால் நோயாளர்களுக்கு இலவசமாக மருத்துவ ஆலோசனையும், சிகிச்சையும் வழங்கப் படும். பொது நலன் விரும்பிகளும், நோயாளர்களும் பங்கு பற்றி சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

குடும்ப மருத்து நிறுவன நிர்வாகத்தினர்.
தொ.பே.இல. 021 222 8100.


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

உள்ளம் மகிழ 22 ★ 10 ★ 1929



உள்ளம் நெகிழ 07 ★ 07 ★ 2008


## திருமதி குலமணி நடராசா

அன்புடன் எமைப் பேணி
ஆதரவு தந்து காத்து
இன்பமாய் நாம் வாழ
ஈகங்கள் செய்த அம்மா!
உம்பதம் போற்றுகின்றோம்!

அன்னாரின் இல்லத்தில் இன்று நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பெரிய மதவடி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
தகவல்:
வ.நடராசா (கணவர்),
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது சபையின் உத்தியோகத்தர்
ம.திருக்குமரன் அவர்களின் தந்தை

## கந்தையா மயில்வாகனம்

காலமானதையிட்டு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலி.வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை, மல்லாகம்.


# எம்புறோடிங் ரை



நீண்டகால பாவனைக்கு உத்தரவாதம்
பாடசாலை மாணவர்களுக்குரிய ரை
69.00 லிருந்து
எஸ் . எஸ். யசோதரன் ஆட்ஸ்
212,கோவில் வீதி, நல்லூர்

# ராஜா 2 யாழ்ப்பாணம்



60 ஆவது நாளை நோக்கி
4முதல் 9 வரை சகல வகுப்புகளுக்கும் அரைக் கட்டணம்
கமல்ஹாசன், அசின்
தசாவதாரம்
காட்சிகள் 10.30–2.00

# தேவை

எமது பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு கணக்காய்வு பயிலுனர்கள், பியோன் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல.
021 222 2478


# தவறிவிட்டது

வேலுப்பிள்ளை தர்மலிங்கம் என்பவருடைய மோட்டார் சைக்கிளின் காப்புறுதிப் பத்திரம் 2008க்கான வரிப்பத்திரம் இரானுவப் பதிவு (அல்லாரை றோட், மீசாலை எனும் முகவரி உடையது.) என்பன 04.08.2008 அன்று யாழ்.நகரப் பகுதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

இ.கோகுலராகவன்
சிங்கராயர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 6321318

# தவறிவிட்டது

வரணி வடக்கு என்னும் முகவரியுடைய வேலுப்பிள்ளை கந்தசாமி என்பவரது தேசிய அடையாள அட்டை (551182762V) 02.08.2008 அன்று நெல்லியடிக்கும் வரணிக்கும் இடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் அதே முகவரிக்கோ அல்லது மொடோர்ன் புத்தக [illegible] அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன் பத்திரிகை நிறுவனமும் கொழும்பு யுனிலங்கா நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட செயலமர்வும் கருத்தரங்கும் நேற்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி சிவன்கோயில் வீதியிலுள்ள தென்மராட்சிக் கலாசார மண்டபத்தில் நடைபெற்றன. அந்நிகழ்வுகளில் 'கிளிக்' செய்யப்பட்ட படங்கள்.

போட்டியில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் விருந்தினர்கள் மற்றும் வளவாளர்களுடன் நிற்பதையும் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினர் இருஞ்பபுறங்களிலும்நிற்பதையும் முதல் மூன்று படங்களிலும் காணலாம்.

போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி எஸ்.ஆர். சத்தியேந்திரம்பிள்ளை, உதயன் சார்பில் பங்கு பற்றிய க.சரவணமுத்து, வணபிதா ரி.எச்.வசந்தகுமார் அடிகளார், தென்மராட்சிக் கல்வி வலய கணித விஞ்ஞான பாட வளநிலைய முகாமையாளர் சி.பத்மநாதன், விரிவுரையாளர் சரா புவனேந்திரன் ஆகியோர் பரிசில்கள் மற்றும் கேடயங்கள் வழங்கிக் கௌரவிப்பதை அடுத்துள்ள படங்களில் காணலாம்.

(படங்கள் : தென்னவன்)

## மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் சிரமதானம்

நவாலி, ஒக.6

ஆனைக்கோட்டையில் கட்டி முடிக்கப் பட்ட மானிப்பாய் அரசின்ர் வைத்தியசா லையில் நேற்று முன்தினம் சிரமதானம் பணி மேற்கொள்ளப்பட்டது.

ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளர் வை.சந்திரராசா தலைமை யில் ஆனைக்கோட்டை விநாயகர் சனச மூக நிலையம், உயரப்புலம் ஆனைக் கோட்டை விவசாய சம்மேளனம், மலரும் மலர்கள் சிறுவர் விளையாட்டுக் கழகம் என்பனவற்றின் அங்கத்தவர்களும் பிரதேச மக்களும் இணைந்து சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

காலை 8 மணிக்கு ஆரம்பமான இப் பணியில் உழவு இயந்திரங்கள், 'லான்ட் மாஸ்டர்' என்பவற்றையும் உரிமையாளர் கள் எடுத்து வந்து வைத்தியசாலையின் 20 பரப்புக் காணியிலிருந்த கற்கள், மண், கழிவுப் பொருள்கள் என்பவற்றை ஏற்றி, இறக்கி உதவி புரிந்தனர். (202-100)

# ப.நோ.கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிக்க 40 ஆயிரம் மெ.தொன் சிமெந்து எடுத்துவர ஏற்பாடு

### மாவட்ட விவசாய கூ.சமாசம் உடன் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக.6

யாழ்.மாவட்டத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விற்பனை செய்வதற்கென 40 ஆயிரம் மெற்றிக் தொன் சிமெந்து குடாநாட்டிற்கு எடுத்து வரப்பட வுள்ளது.

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட் டுறவுச் சமாசம் கொழும்பிலிருந்து இந்தச் சிமெந்தைக் கப்பல் மூலம் தருவிக்கின்றது என சமாசத்தின் தலைவர் ப.கிரிதரன் தெரி வித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில்:

அடுத்தவார முற்பகுதியில் கப்பல் மூலம் எடுத்து வரப்படும் இந்தச் சிமெந்து பைக்கற்றுக்கள் குடாநாட்டில் உள்ள 24 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக நுகர்வோருக்கு பைக்கற் 1,600 ரூபா விலை யில் விநியோகிக்கப்படும்.

சிமெந்துத் தட்டுப்பாடு, அதிகரித்த விலை என்பவற்றால் வேலை வாய்ப்பின்றி இருக்கும் கட்டடத் தொழிலாளர்கள், பொது மக்கள் மற்றும் நுகர்வோர் போன்றோரின் வசதி கருதியே சமாசம் உடனடியாக முதற் கட்டமாக 40 ஆயிரம் மெற்றிக் தொன் சிமெந்தைக் கப்பலில் எடுத்துவருகின்றது.

சிமெந்து தேவைப்படும் பொதுமக்கள் தத்தமது பிரிவுக் கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலர் போன்றோரின் சிபார்சுக் கடிதங்களுடன் சம்பந்தப்பட்ட தமக்குரிய பலநோக்குக் கூட்டுறவுச் சங் கங்களிற்கு விண்ணப்பித்து அவற்றுக் கான முற்பணத்தைச் செலுத்தலாம்.

கூட்டுறவுச் சங்கங்களினூடாக விநி யோகிக்கப்படும் சிமெந்து பைக்கற்றுக்கள் உரிய முறையில் நுகர்வோருக்கு விநியோ கிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் சமா சம் மேற்கொண்டு வருகின்றது - என்றார். (202-224)

## விருந்தினர் உரை நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக 6

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் "விருந்தினர் உரை" நிகழ்வு எதிர் வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உதயன் விருந்தினர் மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

றொட்டேறியன் கே. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலையின் தொழில் வழிச் சிகிச்சையாளர் பி.கணேசலிங்கம் பிரமத விருந்தினராகக் கலந்துகொள்வார்.

"இளந் தலைமுறையினரிடம் ஏற்ப டும் தற்கொலை முயற்சிகளும் இதன் அடிப் படையிலான ஆத்மீக வழிகாட்டலும்" எனும் தலைப்பில் பிரதம விருந்தினர் சிறப்புரையாற்றுவார். (202-149)

# மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளின் திறமைகளை வெளிக்கொணர்ந்து வளங்களாக மாற்ற வேண்டும்

### வாழ்வகத் தலைவர் சொல்கிறார்

நல்லூர், ஒக.6

மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளிடம் திறமைகள் அதிகளவில் இருக்கும்.



புதைந்து - மறைந்து கிடக்கும் அவற்றை வெளிக்கொணர்ந்து நாட்டின் வளங்க ளாக மாற்ற வேண் டியது நம் அனை வரினதும் கடமை.

இவ்வாறு வாழ் வகத்தின் தலைவர் ஆ.ரவீந்திரன் குறிப் பிட்டார்.

சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசா லையின் நான்காம் ஆண்டு நிறைவு விழா பாடசாலையின் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இவ் விழாவில் விருந்தின்ராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ரவீந்திரன் மேலும் கூறியதாவது:

மூளை நரம்புகளின் இயக்கங்களில் ஏற்படக்கூடிய சிறு பிரச்சினைகளால் பிள் ளைகள் சிலசமயங்களில் மனவளர்ச்சி குன்றியவர்களாக ஆகக்கூடும். இன்று இது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படு கின்றன. எமது நாட்டில் இதுபோன்ற பிரச் சினைகளைக் கண்டறிய காலங்கள் செல்ல லாம். எனினும் இங்குள்ள வைத்திய நிபு ணர்கள் இது தொடர்பான கருத்தரங்குகளை நடத்துவது நன்று.

இங்குள்ள அமைதியான சூழலில் இந் தப் பிள்ளைகளை நாட்டின் வளங்களாக மாற்ற முடியும். இந்தப் பாடசாலையின் வளர்ச்சியில் சமுதாயத்தில் ஒருவராக நின்று ஆறு.திருமுருகன் ஆற்றிய பணி நிறைவான பெருமைக்குரியது. எமது மத் தியில் இருந்து நல்ல செயற்பாடுகளை மேற் கொண்ட அவரைப் பாராட்டி மதிக்கும் பண்பை நாம் வளர்த்தெடுக்க வேண்டும்.

உயர்ந்த நோக்குடன் சிந்திக்கும் மனம் படைத்தவர்கள் நிறையவே இருக்கிறார் கள். அவர்கள் இதுபோன்ற உன்னத பணியை வளர்த்தெடுக்க முன்வர வேண் டும். உங்களது ஊக்கமும் உதவியும் நாட் டின் வளங்களாக இவர்களை உருவாக்க உதவும் - என்றார்.

ஆறு.திருமுருகன் தனது தலைமை யுரையில், குறிப்பிட்டதாவது சைவ சமயத் தவர்களின் அறப்பணி மேன்மையானது.

சைவசமயத்தவர்கள் அறப்பணிகள் செய்வதில்லை என பொதுவாகக் கூறப் படுகின்றது. சைவசமயத்தவர்களும் இந்து ஆலயங்கள் பலவும் இதுபோன்ற சமூகத் திற்கு இன்றியமையாத பணிகளை மேற் கொள்வதற்காக தாரளமாக வழங்கி வரு வது அனேகருக்குத் தெரியாமல் இருக்கின் றது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் தேவைகளை நிறைவேற்றி வைப்பதிலும் நோயாளர்களுக்கு உதவுவதிலும் இது போன்ற பணிகள் பலவற்றிற்கும் எமது மதத்தைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் உட்பட பலர் கணிசமான உதவிகளை நல்கி வந்த வண்ணமே உள்ளார்கள் என்பதை ஒவ்வொருவரும் அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

எங்கள் சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்கள் கஷ்டப்படும் பிள்ளைகளுக்காக அவர்களது கல்விக்காக இந்தப் பிள்ளைகள் பல்கலைக் கழகம் செல்ல வேண்டும் என் பதற்காக ஆதரவுக்கரம் நீட்டியவர். அம்மா அவர்களின் ஆசியுடன் எங்களால் தொடங் கப்பட்ட ஒவ்வொரு செயற்பாடு களும் வளர்ச்சி பெற்று வருகின்றது. எமது இந்தப் பிள்ளைகள் ஏனைய பிள்ளைகளைப் போன்று சமூகத்தில் ஓர் அங்கமாக வாழக் கூடியதாக அவர்களுக்குத் தேவையான கல்வியூட்டப்படுவதுடன் ஆசிரியர்கள் நல்ல பயிற்சிகளையும் வழங்கி வருகி றார்கள் - என்றார். (202-111)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்



### கல்வயல் கமக்காரப் பிரிவில்

# காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படும் வயல்கள் பார்வையிடப்படவுள்ளன

### உரமானியம் வழங்குவதற்கு முன்னேற்பாடாக

யாழ்ப்பாணம், ஒக.6

சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்புப் பிரிவில் இவ்வருட காலபோக நெற் செய்கை மேற்கொள்ளப்படும் வயல்கள் அமைப்பின் பிரதிநிதிகளால் பார்வையிடப் படவுள்ளனீ.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பார்வையிடப்படவுள் ளன.

அமைப்பினால் உர மானியம் மற்றும் விதைநெல் ஆகியவை வழங்குவது தொடர் பாக அமைப்பில் நெற்செய்கையாளர் களிடம் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள வயல் கள் பார்வையிட்ட பின்னரே விண்ணப் பங்கள் கமநல சேவைகள் நிலையத்தில் கையளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட் டது.

அன்றைய தினம் நெற்செய்கையாளர் கள் தத்தமது வயல்களில் நிற்குமாறு அமைப்பின் தலைவர் கா.வேதநாயகம் கேட்டுள்ளார்.

அமைப்பின் பிரிவுக்குட்பட்ட பெருங் குளம், அல்லாரை, கெருடாவில், கிராம்பு வில், மானாவளை, விளைவேலி ஆகிய பகுதிகளில் உள்ள நெல் வயல்களையே பார்வையிடவுள்ளதாகவும் தெரிவித்தார். (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சர்வதேச மருத்துவசேவை அமைப்பினால் யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்ட அவசர மருத்துவ தொழில்நுட்ப முதலுதவிப் பயிற்சி நெறியின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆணையாளர் செ.செல்வரஞ்சன் தலைமை உரை நிகழ்த்துவதையும் மேடையில் ஏனைய விருந்தினர்கள் அமர்ந்து இருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

தென்னிலங்கையில் இருந்து வருகை தந்த பயிற்றுவிப்பாளர்களுக்கு நினைவுப் பரிசை பிரதம விருந்தினர் யாழ்.போதனாவைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் என்.ரவிராஜ் வழங்குவதை இரண்டாவது படத்திலும் –

டாக்டர் ஜமுனானந்தா பயிற்சிபெற்ற தொண்டர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் கடைசிப் படத்திலும் காணலாம்.

(படங்கள் : நேசன்)

# சர்வதேச மருத்துவக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் முதலுதவிப் பயிற்சி

வலி.வடக்கு, ஓக.6

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை, இலங்கை சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸின் யாழ்.கிளை என்பவற்றுடன் இணைந்து சர்வ தேச மருத்துவக் குழுவின் இலங்கைப் பிரி வினர் அவசர மருத்துவ தொழில் நுட்ப சேவைக் கான பயிற்சி முகாமை யாழ்.மாவட்டத்தில் நடத்தி வருகின்றனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் அண் மையில் நடைபெற்ற பயிற்சிகளை கொழும் பில் இருந்து வருகை தந்த சர்வதேச மருத் துவக் குழுவின் இலங்கை கிளையின் பிரதி முகாமையாளர் றுவான் ஜமலோன், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் நேமிநாதன்மற்றும் பயிற்று விப்பாளர்களான றுவான் சாமாரா, தயான் சந்துரங்கா, வர்ண பெரேரா ஆகியோர் நடத்தினர்.

இப்பயிற்சி நெறியில் 45 பேர் கலந்து கொண்டு சான்றிதழ்களை பெற்றுள்ளார்கள்.

சான்றிதழ் வழங்கும் நிகழ்வு -கொக்கு வில் இந்துக் கல்லூரியில் செ[illegible] ஜோன்ஸ் அம்புலவன்ஸ் படைப்பிரிவி[illegible] யாழ்ப்பாண ஆணையாளர் செ.செல்வர[illegible]ன் தலைமை யில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை சத் திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி என். ரவிராஜ், வைத்திய கலாநிதி க.திருமாறன், காசநோய் வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி சி.ஜமுனானந்தா மற் றும் ரெலிக்கொம் நிறுவன யாழ்.பொது முகா மையாளர், பொறியியலாளர் உட்பட பலரும் கலந்து கொண்டார்கள்.

சன்றிதழ்களை பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள் வழங்கிக் கௌரவித்தார்கள்.

(202-86)

# பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஓக.6

யாழ்.கல்வி வலயத்தில் அண்மையில் நியமனம் பெற்ற ஆசிரியர்களில் ஒரு தொகுதியினருக்கு ஆங்கிலப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக வலய ஆங்கிலபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

பட்டதாரி ஆசிரியர்களை ஆரம்ப வகுப்பு களில் ஆங்கில பாடம் கற்பிப்பதற்கு பயிற் றுவதற்கான பயிற்சி பட்டறை நடைபெற்று வருகின்றது.

ஒரு தொகுதி ஆசிரியர்களுக்கான பயிற்சி நேற்று முன்தினம் யாழ்.வலயக் கல்வி [illegible]வலக முகாமைத்துவ மண்டபத்தில் ஆர[illegible]பமானது. இதில் 60 ஆசிரியர்கள் பங்கு பற்றுகின்றனர்.

மேலும் ஒரு தொகுதியினருக்கு பயிற்சி விரைவில் வழங்கப்படும் என உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

நிக்கொட்டும் 'றெஸ்க்' (Regional Support Centre) நிறுவனமும் இணைந்து இப்பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

(202-302)

# வடக்கு மாகாண விளையாட்டுப் போட்டி - 2008
# நிலைமையை விளக்குகிறார் மாகாணக் கல்விப் பணிப்பாளர்

தங்கள் பத்திரிகையில் 12.07.2008 இல் வெளிவந்த மாகாண விளையாட்டு விழா இரத்துச் செய்யப்பட்டது; யாழ்ப்பாண அதிகாரிகள் தெரியப்படுத்தாதது ஏன்? எனும் தலைப்பில் இடம்பெற்ற கட்டுரையில் வெளிவந்த செய்தி எம்மை மிகவும் ஆச்சரியப் பட வைத்தது.

இதன் உண்மை நிலையை தெரியப்படுத்துவதில் யாழ்.அரசாங்க அதிபர், யாழ். அரசாங்க செயலகம், வடமாகாணக் கல்வி அமைச்சு, வடமாகாண கல்வித் திணைக் களம், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர், யாழ்.மாவட்ட விளையாட்டுக் குழு என்பன விரும்புகின்றன.

24.07.2008 ஆம் திகதியன்று முதற்கட்டமாக மாணவர்கள், ஆசிரியர்கள், பயிற்றுநர்கள் எல்லாமாக 328 பேர் கப்பலில் பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.

போட்டி இரத்துச் செய்யப்பட்ட விடயம் 25.07.2008ஆம திகதியன்று பிற்பகல் 12.40 மணிக்கு யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு தெரியப்படுத்தப் பட்டது. உடனடியாகவே நாம் இரண்டாம் கட்டத்தில் 26.07.2008ஆம் திகதியன்று பயணம் செல்லவிருந்த பாடசாலைகளுக்கு அறிவித்தோம். அத்துடன் முதலாம் கட்டத்தில் சென்ற மாணவ, ஆசிரியர்களின் நிலை பற்றி மாகாண அமைச்சுடன் தொடர்பு கொண்டு கேட்டோம்.

பத்திரிகையில் வெளிவந்தது போன்று எமக்கு 24.07.2008 இல் அதாவது பயணம் செய்த அன்று தெரிவிக்கப்பட்டிருந்தால் நாம் உடன் உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பயணத்தை மேற்கொள்ளாது தடுத்திருந்திருக்க முடியும். இதே போல் 10.07.2008இல் இதே மாணவர்கள் முதலாம் கட்டமாக கப்பலில் பயணம் மேற்கொள்ளவிருந்த போது திடீரென போட்டி ஒத்திவைக்கப்பட்டது. எனவே மாணவர்களின் பயணத்தை விரைந்து செயல்பட்டு இரத்துச் செய்திருந்தோம் என்பதை குறிப்பிட விரும்புகிறோம். இதனை தங்கள் பத்திரிகையூடாகவும் தெரியப்படுத்தியிருந்தோம்.

முதற் கட்டத்தில் சென்ற 328பேரும் திருமலையிலிருந்து மீண்டும் யாழ்ப்பாணம் திரும்புவதற்காக கப்பலில் ஏறுவதற்கு முன்னர் வலிகாமம் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் தமக்கு மாகாண கல்வி அமைச்சினால வழங்கப்பட்ட உதவிகளுக்கு நன்றி தெரிவித்து பலர் உரையாற்றியிருந்தனர். அதில் தீவக வலய சென் அன்ரனீஸ் கல்லூரி அதிபர் பாராட்டிப் பேசியிருந்தார். இன்னும் பலர் உரையாற்றியிருந் தனர். இம் மாணவர்களுக்குரிய 25.07.2008ஆம் திகதி மதிய உணவு திருமலையிலும் ஏனைய தங்குமிடம், இரவு உணவு வவுனியாவிலும் என ஏற்கனவே ஒழுங்கு படுத் தப்பட்டிருந்தது. திடீரென போட்டி இரத்துச் செய்யப்பட்டதால் மாகாண கல்வி அமைச்சு முழுப்பொறுப்பையும் ஏற்று தம்மால் முடிந்தவரை தங்குமிட வசதி, உணவு, சுற்றுலா என தமது சக்திக்குட்பட்ட வரை மேற்கொண்டனர். தங்கள் பத்திரிகையில் வெளிவந்த செய்தி போட்டியை ஒழுங்கு செய்த அனைவரையும் மன வேதனையடையச் செய் துள்ளது.

வே.தி.செல்வரட்ணம்,
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ்.மாவட்டம்.
யாழ்ப்பாணம்




உடுவில் கிழக்கு
## கற்பகப்பிள்ளையார் கோயில்
## மஹோற்சவ விஞ்ஞாபனம்- 2008

இன்று (06.08.2008) புதன்கிழமை
கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி
17.08.2008 சனிக்கிழமை பூங்காவனத்
திருவிழாவுடன் நிறைவடைகின்றது

### திருவிழா விவரம்

| | | |
|---|---|---|
| 06.08.2008 | இன்று புதன்கிழமை | 12.00 மணி கொடியேற்றத் திருவிழா |
| 12.08.2008 | செவ்வாய்க்கிழமை மாலை | 6.00 மணி கைலாசவாகனத் திருவிழா |
| 14.08.2008 | வியாழக்கிழமை மாலை | 6.00 மணி சப்பரத்திருவிழா |
| 15.08.2008 | வெள்ளிக்கிழமை முற்பகல் | 10.15 மணி தேர்த்திருவிழா |
| 16.08.2008 | சனிக்கிழமை முற்பகல் | 10.00 மணி தீர்த்தத்திருவிழா |

புதிதாக வடிவமைக்கப்பட்ட கைலாசவாகனம்
வெள்ளோட்டத் திருவிழாவாக நண்பகல் 12.00 மணிக்கு
இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

பரிபாலன சபையினர்.

(சி/554045)


# மரண அறிவித்தல்

## கந்தையா மயில்வாகனம்
*(பரந்தன் இராசாயன தொழிற்சாலை)*



மல்லாகம், பூதன் வளவைச் சேர்ந்த, கந் தையா மயில்வாகனம் நேற்று (05.08.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வள்ளிநாயகியின் அன்புக் கணவரும் திருக்குமரன் (சிறி - வலி.வடக்கு பிரதேச சபை, மல்லாகம்), கமலலோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராசா (வர்த்தகர்), பரஞ்சோதி (ஆசிரியை, சிறி முருகன் வித்தியாலயம், மயிலங்காடு) ஆகியோரின் அன்பு மாமனும் இராசதுரை (மலேசியா), காலஞ்சென்ற நடராசா, சிவம்மா, சோதி, பொன்னையா காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், விஸ்வலிங்கம் மற்றும் சிவலிங்கம் (ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம்), சிவனேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், கண்மணி மற்றும் முத்துலிங்கம் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் கோபிநாத் (யூனியன் கல்லூரி), ராம்நாத் (யூனியன் கல்லூரி), கவிதா (இராமநாதன் கல்லூரி), பிரணவநாத் (இராமநாதன் கல்லூரி) ஆகியோரி[illegible] அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.08.2008) புதன்கிழமை ந.ப.12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு [illegible]டுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பூதன் வளவு,*
*மல்லாகம்.*

தகவல்:
திருக்குமரன் *(சிறி)*

(சி/554048)

# சாவ.டிறிபேர்க் 4 மாணவருக்கு சைக்கிள்கள்

யாழ்ப்பாணம்,ஓக. 6

சாவகச்சேரி டிறி பேர்க் கல்லூரியில் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்புகளில் கற் கும் வறுமைக் கோட் டின் கீழ் வாழும் குடும் பங்களைச் சேர்ந்த 4 மாணவர்களுக்கு சைக்கிள்கள் அண் மையில் கல்லூரி அதி பர் க.அருந்தவ பால னால் வழங்கப்பட் டன.

யாழ். ஈ.எஸ் நிறு வன அதிபர் பே.நாக ரத்தினம் நான்கு சைக்கிள்களை அன் பளிப்பாக வழங்கியி ருந்தார்.

ஆண்களுக்குரிய இரு சைக்கிள்களை யும் பெண்களுக் குரிய இரு சைக் கிள்களையும் வழங் [illegible]

(202-207)


# வெற்றிபெற வாழ்த்துக்கள்

இம்முறை 2008 A/L பரீட்சை எழுதும் மாணவர்கள் வெற்றி பெற்று சாதனைகள் பல புரிவதற்கு ASIAN - CSC இன் உளமார்ந்த வாழ்த்துக்கள்.

50% Special Offer...

கணக்கியல் துறையில் ஓர் புதிய பரிமாணம்

Certified Computer Accountant

A/L மாணவர்கள், HNDA, AAT, பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் கணக்கியல் துறையில் ஆர்வமுடையவர்கள் அனைவருக்குமான கட்டணச்சலுகை.

Tally ies 9.0

Quick Books Premier

QUICKBOOKS

புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

| வார நாட்கள்: | வார இறுதி நாட்கள்: |
|---|---|
| wed : 10.00-11.30 | sat : 9:00-10:30 |
| fri : 10.00-11.30 | sun : 9:00-10:30 |

ASIAN- CSC COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Tel :021 222 5677

கிளை :
கொடிகாமம் வீதி, நெல்லியடி.
Tel :077-3122198


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரணிக்கு அருள் செய்யும் தமிழ் நல்லைக் கந்தன்



**முருகு** என்றால் அழகு, இளமை, வீரம் எனப் பல பொருள்படும். ஈழத்தின் தலைசிறந்த குமர கோட்டங்களிலே ஒன்றாக விளங்குவது நல்லைப் பதி. அது நாவலர் பிறந்த நற்பதி. தத்துவ சித்தர்கள் செல்லப்பாச்சாமியார், யோகர்சுவாமிகள் வாழ்ந்த ஞானபூமி. தமிழ் வளர்த்த முருகன் சிவனது சக்தியாக தோன்றியவன். உலகுமுய்ய முருகனாக உதித்தவன். அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய், பிரமமாய் நின்ற ஜோதிப்பிழம்பாகிய இறைவன் முருகனாக உதிக்கின்றான்.

'இப்பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு' என்பது திருவாசகம். ஆண்டவன், ஆன்மாக்கள் ஆகிய நாம் வேறு வழிகளில் செல்லாது உய்யும்படி இப் பூமியிலே பிறக்கச் செய்து அவற்றில் போகங்களை அருளி இவ்வுடம்பையும்அனுபவிக்கக்கொடுத்துள்ளான். 'இவ்வாழ்க்கை அவனால் வந்த ஆக்கம்' என்கிறது சிவஞானசித்தியார்.

ஆகவே புன்னெறியகலச் செய்து நன்னெறியில் வாழ வேண்டியது அவசியம். அத்தகைய வாழ்வை அளிப்பவன் முருகன்.

நல்லை முருகன் ஆலயத்தில் நற்பெரும் திருவிழா இன்று ஆரம்பமாகின்றது. நல்லை முருகன் ஆலயம் கந்தபுராண கலாசாரத்தையும், வரலாற்று ஆதாரத்தையும், தமிழ்மக்களின் புனிதமான தன்மையையும் பேணிப் பாதுகாத்து வருகிறது. ஆலயச் சூழல் வரலாற்றின் விழுமியங்களாகச் சங்கிலியன் தோப்பு, யமுனா ஏரி, சட்டநாதர் கோயில், கைலாச பிள்ளையார் கோயில், வீரமாகாளியம்மன் கோயில், திருஞானசம்பந்தர் ஆதீனம் என்பவை எடுத்துக் காட்டுகளாக உள்ளன.

ஆலய மகோற்சவம் துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகி இருபத்தைந்து தினங்கள் நடைபெற்று ஆவணி அமாவாசை தினத்தன்று நடைபெறும் தீர்த்த வாரியுடன் நிறைவுறும். இவற்றுள் தஞ்சத்தருள் சண்முகன் மஞ்சத்தில் பவனி வரும் விழா, ஞானத்தின் திருவுருவாம் ஞானநாயகன் இசையர்ச்சனையுடன் நடைபெறும் கார்த்திகை உற்சவம், மகிதலம் போற்றும் மாங்கனி உற்சவம், சிவனே முருகன், முருகனே சிவன் என்னும் பேதமகற்றும் கைலயங்கிரிக்காட்சி, தரணி மகிழும் தங்கரதப்பவனி, ஆர்த்த துயர்கெடும் தீர்த்த உற்சவம் என்பவை முக்கியத்துவமாக விளங்கும்.

உற்சவங்கள் யாவும் தெய்வத்து இளநலம் காட்டுபவை. தினமும் ஆறுகாலப்பூசைகள் நடைபெற்றுவரும் இவ்வாலயத்தில் நித்திய, நைமித்தியம், காம்யோற்சவம் அனைத்தும் குமார தந்திர ஆகமத்துக்கு அமைவாகவே நடைபெறுகின்றன.

நல்லைக்கந்தன் ஆலயத்தில் ஆண்டுதோறும் கந்த புராணம் படிக்கப்பட்டு பொருள்சொல்லும் வழமை இன்றும் நடைபெற்று வருகிறது. கந்தபுராண கலாசாரத்தை வளர்க்கும் மையமாக இந்த ஆலயம்விளங்குகின்றது சிறப்புக்குரியது:

ஆலயத்தின் உள்ளும் புறமும் உள்ள அழகும், தூய்மையும் நேர ஒழுங்குகளும் மக்களைத் தனித்துவமான ஓர் ஆன்மீக சிந்தனைக்கு இட்டுச் செல்கின்றன.

நல்லைக்கந்தன் ஆலய உற்சவம் ஆரம்பமானதும் சைவமக்கள் யாவருக்கும் மனங்களிலே எழிச்சியும், மகிழ்ச்சியும், புத்துணர்ச்சியும் ஏற்படுகின்றன.

கந்தன் பவனி 'இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால், இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒரு பால், துன்னிய பிணைமலர்க்கையினர் ஒரு பால், தொழுகையர், அழுகையர், துவள்கையர் ஒருபால், சென்னியில் அஞ்சலி செய்பவர் ஒருபாலென' அமையும் தன்மையானது.

ஆகவே கலியுகவரதன் கந்தன், நல்லைக் குமரனை வந்தனையுடன் சிந்தனை செய்து நமது பாரம்பரிய சமய விழுமியங்களை, வரலாற்றை, கலாசாரத்தைப் பேணிப் பாதுகாப்பது நமது கடமையாகும். ✱

**சோ.இ.பிரணதார்த்திஹரக்குருக்கள்**
**கோப்பாய்.**

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஒக்.6

மீசாலை, திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழா இன்று புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். (203-207)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம்,ஒக்.6

மீசாலை கிழக்கு, சித்திர வேலாயுதர் ஆலயப் பெருந் திருவிழா இன்று கொடியேற்றத் துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. (203-207)

✱ ✱ ✱

கொழும்புத்துறை.ஒக்.6

கொழும்புத்துறை மேற்கு, பழனியாண்டவர் ஆலய அலங்காரத் திருவிழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

திருவிழா பூர்த்தி நாளாகிய எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 9 மணிக்குச் சங்காபிஷேகமும் தீர்த்தத் திருவிழாவும் பிற்பகல் 3 மணிக்குத் திருக்கல்யாணமும் நடைபெறும். (203-224)

✱ ✱ ✱

நல்லூர்,ஒக்.6

ஆவரங்கால் கிழக்கு, புதுவை ஆலடி முருகன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-111)

## துர்க்கா மணிமண்டபத்தில் இன்று தொடக்கம்அன்னதானம்

நல்லூர்,ஓக 6

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இன்று புதன்கிழமை தொடக்கம் 25 நாள்களும் துர்க்கா மணிமண்டபத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

## மாதாந்த ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,ஓக 6

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் கடமை புரியும் சமூக சேவை அலுவலர்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்ட சமூகசேவைகள் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது என்று மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் ஆ.ஞானவேல் தெரிவித்துள்ளார். (203)




நல்லூர் கந்தசுவாமி கோயிலில்
இன்று கொடியேற்றம்
முதலாம் திருவிழா
முற்பகல் 10 மணிக்கு- துவஜாரோகணம்
நல்லையிலே கொடியேற்றி நானிலமும் காத்திட வா!
விழா சிறப்புற வாழ்த்துவோர்:
நித்திய கல்யாணி நகை மாளிகை
இல. 205/4, கஸ்தூரியார் வீதி (ராஜா கட்டடத் தொகுதி), யாழ்ப்பாணம்.
T.P. 021- 4590214.







## நல்லை வீதியில் நாளும் வந்திடு



*பல் விழுந்த பாட்டியர் பற்பலர்*
*பொல்லினை ஊன்றியே பூரித்து நின்றனர்*
*சொல்லிழந்த முதியவர் கூடியே*
*சோர்வு நீங்க நின்றனர் வீதியில்*
*சொல்லரும் கொடு நோய்வாய்ப்பட்டவர்*
*சோர்ந்து விழுந்து கிடந்தனர் வீதியில்*
*மெல்லியர் நங்கையர் மேனி மினுக்கியே*
*மெதுவாய் உன்நாமம் இயம்பி நின்றனர்*
*வல்ல நல்ல வாலிபர் ஆயிரம் ஆயிரம்*
*வந்து விழுந்து உருண்டனர் வீதியில்*
*அல்லல் போக்கும் ஆறுமுக வேலவா!*
*நல்லை வீதியில் நாளும் வந்திடு*
*அல்லல் தீர இன்று ஆனந்தக் கொடியேறுது.*

- **விகடகவி.**

## தொல்லைகள் நீக்கிடுவான்

நல்லூர்க் கந்தனைப் பாரு
நலம் தரும் பதமலர்
நாடியே ஒரு -
நல்லூர்க் கந்தனை....

வல்வினை போக்கிடுவான்
வளம் நிறை வாழ்வினை
வழங்கியே காத்திடுவான்

தொல்லைகள் நீக்கிடுவான்
தொடர்கின்ற போரினை
துடைத்திட இனிவழி
துரிதமாய் ஆக்கிடுவான்
நல்லூர் கந்தனை - பாரு

- ரம்யன்.

## கொடியேறி வந்துநீ காத்திடையா

நல்லூரில் இன்று கொடியேற்றம்
நாடிவரும் பக்தர் பெருங்கூட்டம்
சொல்லி அழுவர் துயரங்கள்
தொடர்கதை யான அவலங்கள்
எல்லாம் அறிந்தும் முருகா நீ
ஏனோ மௌனமாய் இருக்கின்றாய்
கல்லோ உன்தன் மனமென்ன
கருணை காட்ட மாட்டாயோ
பொல்லா வாழ்வு ஏனெமக்கு
போதும் உன்தன் பொறுமையினி
எல்லை கடந்து போகுமுன்னே
எழுந்து வந்து காத்திடையா

- வ.யோகானந்தசிவம்.

## நல்லூரானே... நல்வாழ்வு தந்திடய்யா

ஆடிவரும் மயிலேறும் ஆணழகா - முருகா
நம் அவலகங்கள் அடியோடு மண்ணினிலே - மறைய
கோடிமுறை யுனைப் பணிந்தோம் கோமகனே - மருகா
கொண்டவள்ளி தெய்வானையின் - மணவாளா
பாடியுனை நிதம் தொழுகின்றோம் - பாலகனே
பக்தர்களின் குறைதீர்க்கும் பாங்கான - வேலவனே...
நாடிவரும் அன்பர்க்கு நலமளிக்கும் - நல்லூரானே...
நல்வாழ்வும் நற்கதியும் நமக்களித்தருள்வாய்!

*க. நாகேஸ்வரா*, சண்டிலிப்பாய்.

## நமக்கொரு தீர்வருள நல்லூரில் கொடியேற்று

நல்லைத் திருப்பதியின் கந்தவேளே கொடியேற்று
நமக்கொரு தீர்வருள முருகா கொடியேற்று
எல்லை மீறும் துயர் போக்க கொடியேற்று
ஏற்றதோர் தீர்வருள முருகா கொடியேற்று
தொல்லை வினையகற்ற முருகா கொடியேற்று
தோகை மயில் வாகனனே கொடியேற்று
நல்ல சமாதான வாழ்வு மலர கொடியேற்று
நாடும் அன்பர் குறை தீர்க்க கொடியேற்று.

- மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தன்

## அமைதியின் கடவுளின் அருட் கொடி ஏறுதே!

நல்லூரின் வேலவனின் அருட்கொடி ஏறுதே - அந்த
நற்காட்சி காண்கையிலே பக்தி எல்லை மீறுதே (நல்லூரின்)

பல்லாரும் நின்றோவன் குகன் புகழ் கூறுதே - தமிழ்
மண்மீது அமைதிதர வானோடு சேருதே (நல்லூரின்)

பொல்லாத பகை, கோபம் பாவங்கள் தொலையுதே - வாழும்
பொழுதுகள் இனிக்க போர் மேகங்கள் கலையுதே
இல்லாதோர் செல்வந்தர் பேதங்கள் மறையுதே - குகன்
என்கின்ற நாமமே இதயத்தில் நிறையுதே (நல்லூரின்)

எல்லாமும் முருகனெனும் இறை செயல் ஆகுமே - அன்பில்
இணைந்திடும் அன்பர்க்குத் துயர் பொடியாகுமே
அல்லாத பொருள், உயிர் அழிவுகள் தகருமே - எங்கும்
அமைதியின் கடவுளாம் குகன் புகழ் பகருமே (நல்லூரின்)

- *வளலாய் ரஞ்சன், ஆனைக்கோட்டை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திமிங்கிலத்தை ஏன்? மனிதன் வேட்டையாடுகிறான்



ஒரு காலத்தில் திமிங்கில வேட்டையாடுதல் என்பது பெரும் வருமானமுள்ள தொழிலாகக் காணப்பட்டது. தற்பொழுது திமிங்கில வேட்டையாடுதலுக்கு பல நாடுகள் தடை விதித்துள்ளன. சில நாடுகள் கட்டுப்பாடுகளை விதித்துள்ளன.

இந்தப் பெரிய கடற் பிராணியை ஏன் மனிதர்கள் வேட்டையாடுகிறார்கள்? ஆம் திமிங்கிலத்திலிருந்து கிடைக்கும் பெறுமதியான பொருள்கள் ஆச்சரியமளிப்பவையாகும்.

திமிங்கிலத்தின் உடலிலுள்ள தோலுக்குக் கீழே உள்ள திசுக்கள் அடர்ந்த பகுதியில் திறமான ஒருவகை எண்ணெய் கிடைக்கிறது. உலகின் சில பகுதிகளில் இவ்வெண்ணெய் எரிப்பதற்கு பயன்படுகின்றது. பெரும்பாலும் சவர்க்காரத் தயாரிப்புக்கே இது பயன்படுகின்றன.

திமிங்கில இறைச்சி பல நாடுகளில் மக்களால் விரும்பி உண்ணப்படுகின்றது. திமிங்கிலத்தின் அடிப்பகுதி மாமிசமும் எலும்பும் உரம் தயாரிக்கப் பயன்படுகின்றது.

ஸ்பேர்ம் வேல் (Sperm whale) எனப்படும் திமிங்கிலமானது அகன்ற பெரிய பற்களையும் பெரிய தலையையும் கொண்டிருக்கும். இந்தத் தலையில் ஒரு வகைக் கொழுப்பு தேங்கியிருக்கும். இது தைலங்கள், மெழுகுவர்த்திகள் மற்றும் அழகு சாதனப் பொருள்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும். இந்த வகை திமிங்கிலத்தின் குடலில் இருந்து பெறுமதியான ஒரு பொருள் தயாரிக்கப்படுகின்றது. அதிலிருந்தே வாசனைப் பொருள்கள் உருவாக்கப்படுகின்றன. திமிங்கிலங்களின் பற்கள் (யானைத் தந்தம் போன்று) பெறுமதி வாய்ந்த பொருளாக [illegible]ளைத் திமிங்கிலத்தின் தோல் சிற[illegible]கள் செய்வதற்கான பொருளாகப் பய[illegible]கின்றது.

திமிங்கிலங்கள் எல்லாமே பாலூட்டிகள்தாம். அவை நீரில் வாழக் கற்றுக் கொண்டுள்ளன. நிலத்தில் வாழ்ந்த ஒரு வகை விலங்குகளின் வழித்தோன்றல்களே இவை என்று கருதப்படுகின்றது. அவைகளின் கைகளில் 5 விரல்கள் இருந்த அடையாளமாக விரல் எலும்புகள் காணப்படுகின்றன. அவை தசையாலும் தோலாலும் மூடப்பட்டுள்ளன. சில திமிங்கிலங்களுக்கு பின்னங்கால்கள் இருந்துள்ளதன் அடையாளமாக பின் தசைகளில் கால் எலும்புகள் காணப்படுவதுண்டு.

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நீரில் வாழ்ந்து விட்டமையால், இந்த மாதிரியான வாழ்க்கைக்கு அவை நன்கு பழக்கப்பட்டு விட்டன.

-ராம்.

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த டிரைஸ் ஸர்ப்ரான் என்பவர் ஒரு தடவை நாணயங்களை மேசைமேல் வைத்து விளையாடிக் கொண்டிருந்தார். ஒரு நாணயத்தை மேசை மேல் வைத்து உருட்டிய போது அது சிறிது தூரம் நேராக ஓடி பிறகு விழுந்தது.

அதனைப் பார்த்த டிரைஸ் நாணயம் உருளும்போது செங்குத்தாக நேரே போனதைப் பற்றி யோசனை செய்தார். பிறகு மரச் சக்கரம் ஒன்றை உருவாக்கி உருட்டிப் பார்த்தார். பிறகு இரு மரச் சக்கரங்களை உருவாக்கி சிறிது தூரம் விட்டு இணைத்தார். அந்த இணைப்புப் பலகை மீது இருக்கை ஒன்றை அமைத்தார். அந்த இருக்கை மீது அமர்ந்து இருகால்களையும் தரையில் உந்தி அந்த வாகனத்தை ஓட்டினார். இதுவே இன்று நாம் பயன்படுத்தும் சைக்கிள் தோன்றிய வரலாறு.

இந்த சைக்கிள் உருவாக்கப்பட்டது 1814 ஆம் ஆண்டில்.

1816 ஆம் ஆண்டு பிரெஞ்சுக்காரர் ஒருவர் இந்த மாதிரி சைக்கிளைத் தயாரித்து விற்பனை செய்தார்.

1839 ஆம் ஆண்டில் இந்த சைக்கிளில் பல மாற்றங்களைச் செய்து விற்பனை செய்தவர் கிர்க்பொட்ரிக் என்பவர். அதாவது சைக்கிளில் 'பிரேக்', 'ஹான்டில்பார்' போன்றவற்றைப் பொருத்தினார். பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பீரிலால்[illegible] என்பவர்தான் பெடலைப் பொருத்தினார். இவர் முன்சக்கரத்துக்கே பெடலைப் பொருத்தினார்.

இதற்குப் பிறகு மிசாக்ஸ் என்பவர் முன் சக்கரத்தைப் பெரிதாகவும் பின்சக்கரத்தைச் சிறிதாகவும் அமைத்து முன் சக்கரத்திற்கு பெடலை இணைத்தார்.

இது மணிக்கு சுமார் 30 கிலோ மீற்றருக்குப் பயணம் செய்யக் கூடியதாக அமைந்திருந்தது. 'பென்னி பார்த்திங்' என்று பெயர் சூட்டப்பட்டது.

இந்த சைக்கிளில் பயணம் செய்வது மிகவும் கடினமாக இருந்தது. இதை உணர்ந்த சுவிஸ்சர்லாந்து நாட்டைச்சேர்ந்த ரெனால்ட் என்பவர் இரு சக்கரங்களையும் ஒரே மாதிரியாக இரும்பில் செய்தார். பல்சக்கரங்கள், இரண்டு சக்கரங்களையும் இணைக்கும் சைக்கிள் 'செயின்', ''போல் பியரிங்'' என்பவற்றையும் பயன்படுத்தினார்.

சைக்கிளின் சக்கரங்கள் மேடு, பள்ளங்களில் இலகுவாக உருள காற்றடித்த ரியூப்களையும் அவற்றின் மேல் ரயர்களையும் பொருத்தினார் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஜோன்டன் லப். இவரே சைக்கிளில் ஸ்பிரிங் இருக்கையையும் பொருத்தியவர்.

1889 ஆம் ஆண்டில் ஜோன் டன்லப் உருவாக்கிய முழுமையான சைக்கிளே இன்று நாம் பயன்படுத்துபவை.

- செந்தினி, பாஷையூர்.

## அனைவருக்கும் வாகனம்



# ஜமைக்காவில் கீரியின் அட்டகாசம்

புதன் பொய்கை

கீரிப்பிள்ளை என்று சொல்கின்றோம். அதனை நம்மில் பலர் பார்த்தும் இருக்கின்றோம். இந்த மிருகம் இந்தியாவில் தான் அதிகமாகக் காணப்படுகின்றதாம்.

மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான ஜமைக்காவில் சில காலங்களுக்கு முன்னர் ஃபெர்தி லேன்ஸ் என்னும் ஒருவகை நச்சுப்பாம்பு மிக அதிகளவில் காணப்பட்டன. இவற்றின் கடிக்கு இலக்காகி பலர் இறக்கவும் நேரிட்டது. இதனால் அத்தீவில் வாழ்ந்தவர்கள் பெரும் கவலையுடன், இந்தக் கீரிகளை அழிக்கவும் வழியின்றித் தவித்தார்கள். 'அழிக்கவே முடியாதது பாம்பு' என்று முதுமொழியையும் உருவாக்கி வைத்திருந் தார்களாம்.

ஒருவருக்கு ஒரு புத்திசாலித்தனமான எண்ணம் தோன்றியது. இந்தியாவில் இருந்து நிறைய கீரிப் பிள்ளைகளைக் கொண்டு வந்தால் தங்களுக்கு துரோகம் செய்யும் பாம்புகளை அவை செமத்தியாகக் கவனித்துக்கொள்ளும் என்பதுதான் அந்த யோசனை.

அந்த யோசனையை ஏற்றுக் கொண்டவர்கள் கப்பல்கள் மூலம் இந்தியாவிலிருந்து நூற்றுக்கணக்கான கீரிப்பிள்ளைகளைக் கொண்டுவந்தார்கள்.

அங்கு சென்ற கீரிகளுக்கும் ஜமைக்கா நன்றாகப் பிடித்துவிட்டது. கீரிப்பிள்ளைகள் மளமள எனப் பெருகத் தொடங்கின. பாம்புகளும் மளமளவெனக் குறைந்தன. இது ஜமைக்கா வாசிகளுக்கு மிகவும் சந்தோஷம்.

ஆனால் இது ஓர் அற்ப சந்தோஷமாகவே அவர்களுக்கு நிலைத்தது. ஏன் தெரியுமா?

ஜமைக்கா வாசிகளுக்குப் பெரும் இடையூறாகவும் ஆபத்தாகவும் விளங்கிய பாம்புகளைத் தின்று தீர்த்த கீரிப்பிள்ளைகள் அவர்களது வளர்ப் புப் பிராணிகளான கோழிகள், வாத்துகள் என்ப வற்றையும் பிடித்துச் சாப்பிட ஆரம்பித்து விட்டன.

தங்களது வளர்ப்புப் பிராணிகளை கீரிகளிடமிருந்து காப்பதற்கே பிரயத்தனப்பட வேண்டியுள்ளது.



அவர்கள் இப்போது கீரியை எப்படி ஒழிப்பது என ஆலோசிக்கத் தொடங்கியுள்ளார்கள். 'பாம்பை அழிப்பது சுலபம். கீரியை அழிப்பது சுலபமல்ல' என்பது அவர்களின் இப்போதைய புதுமொழி.

## அவலம்

எங்கள் பெருமூச்சுக்கள்
பெரும் சாபக் காற்றாய்
சாதிக்க வேண்டுமென்றே
சுவாசித்துக் கொண்டிருக்கின்றோம்.
பிணங்களின் நடுவே
நடைப் பிணங்களாக அலைகின்றோம்.
பிரமித்து நின்ற நம் மானுடம்
சரிந்து போனது நமது த(ச)ரித்திரம்.
வாழ்க்கைச் செலவு அடிமடியில்
இடி விழுவது போல் உயர்வு
நாளாந்த வாழ்வ உயிரை
விடுவது போல் உணர்வு
எரிந்து கொண்டிருக்கும் வயிற்றில்
எட்டி மிதிப்பது போல்
எரிபொருள் விலையேற்றம்
வாழ்வின் நிலை எண்ணி வாடுது மனவோட்டம்.
எங்கே போய்க்கொண்டிருக்கின்றோம்.......
சற்றே திரும்பிப் பார்
சறுக்கிய வாழ்வின் அடையாளங்களிலிருந்து
ஏதாவது பொறுக்க முடியுமா என்று!
முடியவில்லை எனில்,
உயரே பார் உன்னில் விட
எத்தனை முன்னேற்றம் பாரினில்!

கே. எஸ். நிமலன்.

# எய்தவனிடம் திரும்பி வரும் ஆயுதம்

'பூமராங்' பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். எய்தவனிடமே திரும்பி வரக்கூடிய அதிசய ஆயுதம் என்பதை அறிந்திருப்போம். அதனைப் பற்றிய மேலதிக தகவல்களைப் பார்ப்போமா?

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆஸ்திரேலியப் பழங்குடிகளால் செய்யப்பட்டு உபயோகிக்கப்பட்ட ஆயுதமே பூமராங். இது ஒரு வளைதுறுந்தடி. விசித்திரமாக சீவி வளைத்த இந்த மரத்துண்டைப் பார்த்தால் இது ஏதோ சரித்திர காலத்துக்கு முந்திய பயங்கரமான ஆயுதமாகத் தோற்றமளிக்கின்றது.

இதுதான் குறிபார்த்துத் தாக்கும் ஆயுதமாக உலகில் முதலில் தோன்றியது என ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். இன்றைய பொறியியலாளர்கள், கணித மேதைகளையும் இந்தக் கருவி மனங்கவர்கின்றது.

ஒரு மரத்துண்டை எதிரி மீது கோபத்தில் வீசியெறிந்துள்ளான். அப்போது தற்செயலாக இந்த பூமராங் தத்துவம் தோன்றியது என்பது ஒரு சாராரின் கருத்து.

பூமரங்கை நூறு அடி தூரத்திலுள்ள எதிரி மீது விட்டெறிந்தாலே தாக்கி கொல்லக்கூடியது. ஆனால் குறியைத் தாக்கத் த[illegible]னால் தன்னை வீசியெறிந்தவனிடமே திரும்பி வ[illegible] அவனையே தாக்கும் அபாயமும் உள்ளது.

இந்த ஆயுதம் பெரும்பாலும் இளம்பிறை வடிவத்திலேயே அமைந்திருக்கும். திரும்பிவரும் பூமராங் உள்பாகம் நல்ல [illegible]ணமும் சற்றுக் குட்டையும் சற்று நீளமான இரண்டு புஜங்களையும் கொண்டுள்ளது. இந்தப் பூமராங் அதிசயமாகத் திரும்பி வருவதற்கு அந்தப் புஜங்களின் அமைப்பே காரணம்.



சந்தோஷன் குப்பிளான்.

மத்திய ஆஸ்திரேலியாவில் உள்ள 'ஜிப்ஜெக்' என்னும் ஒரு வகைக் கருவேல் மரமும், யூலிப்ஸ் இனத்தைச் சேர்ந்த 'ஐரோ', மர்ட்டில் ஆகிய மரங்களும், மேற்கு ஆஸ்திரேலிய[illegible] இந்தப் பூமராங்கைச் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த ஆயுதத்தைப் பயன்படுத்துபவன் [illegible] பற்றும் நிபுணனாக விளங்கவேண்டும். இல்லையென்றால் அவனுக்[illegible]

# புகையிலையை முதன் முதலில் பயிரிட்டவர்களும் பாவித்தவர்களும்

(ரம்யன்)



புகையிலையை பயிரிட்டவர்களும் அதனை புகைப்பதற்கு முதன்முதலில் பயன்படுத்தியவர்களுமான மக்கள் வடக்கு மற்றும் தென் அமெரிக்காவைச் சேர்ந்த செவ்விந்தியர்களே என்று கருதப்படுகின்றது.

கிறிஸ்தோபர் கொலம்பஸூம் அவருடன் வந்த ஆராய்ச்சியாளர்களும் அங்குள்ள மக்கள் புகையிலையை பல்வேறு வகையில் பயன்படுத்தி வருவதைக் கண்டார்கள். உதாரணமாக தங்களுக்குள் அமைதி நிலவ வேண்டும் என்பதற்காக அவர்கள் சுங்கானை புகைத்து நல்லெண்ணத்தை வெளிப்படுத்திக் கொண்டார்கள். புகையிலையில் நோய்களைப் குணப்படுத்தும் தன்மைகள் உண்டு என்றும் நம்பினார்கள்.

16 ஆம் நூற்றாண்டு வாக்கில்தான் புகையிலை ஐரோப்பாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஐரோப்பாவில் வர்ஜீனிய ஆளுநரால் புகையிலை அறிமுகப்படுத்தப்பட்டது. 1586 இல் செவ்விந்திய சுங்கான் ஒன்றினைக் கொண்டுவந்து சேர் வோல்ரர் ரலி என்பவருக்கு அதனை எப்படி பாவிப்பது என்பதையும் பழக்கினார் அந்த ஆளுநர். 1619 ஆம் ஆண்டளவில் லண்டனில் பல்வேறு விதமான சுங்கான்கள் பயன்படுத்தப்பட தொடங்கின. சுங்கான் தயாரிப்பாளர் கழகம் ஒன்றும் உருவாக் கப்பட்டது.

இன்று புகையிலையானது 'சிகரெட்' என்ற வகையில் புகைக்கப்டுகின்றது. 'சிகெரட்' பாவிப்பும் மிகப் பழமையான ஒரு வழக்கமே. மேற்கு இந்தியர்களும் மெக்சிக்கோ வாசிகளும் சிகரெட் பாவிப்பதை அங்கு சென்ற ஸ்பானிய ஆராய்ச்சியாளர்கள் கண்டுள்ளார்கள். மேற்கு இந்தியத் தீவுகளில் ஒருவகை வாழை போன்ற மரத்தின் மெல்லிய இலையை புகையிலையைச் சுருட்டி புகைப்பதற்குப் பயன்படுத்தியுள்ளனர். மெக்ஸிக்கோவில் கோதுமை உமியைப் பயன்படுத்தியுள்ளனர்.

சிகரெட் தயாரிப்பதற்கு முதன்முதல் கடதாசியைப் பயன்படுத்தியவர்கள் ஸ்பானியர்களாவர். துருக்கியரின் செல்வாக்கில் இருந்த போது மத்திய தரைப்பகுதியிலும் கருங்கடல் பிரதேசத்திலும் புகையிலை [illegible]. 1854 - 1856 பகுதியில் கிறிமிய போரில் [illegible] படையினர் துருக்கிய சிகரெட்டுக்களைக் [illegible] கொண்டு சென்றனர். ஒரு சில வருடங்களில் லண்டன் நகரில் [illegible] தொழிற்சாலையொன்று ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிலாண்டோ ஜெனித் 61 ஓட்டங்களை விளாசினார் ஜெரி ஜோன்சன் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்


மிலாண்டோ ஜெனித் ஜெரி ஜோன்சன்

வலி.வடக்கு,ஓக.6

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் 17 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக் கல்லூரி 43 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

மிலாண்டோ ஜெனித் இரண்டு ஆறுகள், ஒன்பது நான்குகளுடன் 61, சஜிந்திரன் ஐந்து நான்குகளுடன் 34, நவதீபன் நான்கு நான்குகளுடன் 26 மற்றும் கமில்டன் 22, சஞ்சீவராஜ் 21 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 27 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கோகிலன் 07 ஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளையும் விஷ்ணுகாந் 08 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 26 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் கபிலன் 07 ஓவர்கள் பந்துவீசி 28 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் வைகுந்தன் 06 ஓவர்கள் பந்துவீசி 38 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

220 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மகாஜனக் கல்லூரி 18.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 82 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

புவிதரன் ஒன்பது நான்குகளுடன் 38, கபிலன் ஒரு ஆறு, இரண்டு நான்குகளுடன் 23 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 10 ஓட்டங்கள் மட்டும் பெறப்பட்டன.

ஜெரி ஜோன்சன் 09 ஓவர்கள் பந்துவீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 26 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுகளையும் சஜீந்திரன் 5.5 ஓவர்கள் பந்துவீசி 26 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

# ஸ்ரான்லியை 6 விக்கெட்டுகளால் வென்றது சென்.பற்றிக்ஸ்

வலி.வடக்கு,ஓக.6

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் 15 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 06 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயமும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன.


கவாஸ்கர்

முதலில் துடுப்பெடுத்தாடிய கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயம் 22 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 49 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

கஸ்கரன் 10 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 24 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கவாஸ்கர் 07 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 10 ஓட்டங்களுக்கு 06 விக்கெட்டுகளையும், சுகந்திரன் 04 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 07 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், அஜித் டார்வின் 03 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 06 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

மிகவும் குறைந்த ஓட்டமான 50 ஓட்டத்தை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 10.2 ஓவர்களில் 04 விக்கெட்டுகளை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

ஆட்டமிழந்தவர்களில் நால்வர் ஓட்டம் எதுவும் பெறாது ஆட்டமிழந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆட்டமிழக்காது நிலக்சன் ஒரு ஆறு ஒரு நான்குடன் 20, கவாஸ்கர் 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

மதன் 05 ஓவர்கள் பந்து 18 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் யோஸ்ரன் 3.2 ஓவர்கள் பந்துவீசி 27 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

# கொக்குவில் இந்து - ஸ்கந்தா மோதல்; சதம் அடித்துக் கலக்கினார் பவீந்திரன்

வலி.வடக்கு,ஓக.6

கொக்குவில் இந்துக் கல்லூரியின் 17 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணி வீரன் பவீந்திரன் ஆட்டமிழக்காது 102 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்க ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆட்டம் ஒன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி 116 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 49.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

க.பவீந்திரன் ஒரு ஆறு, பன்னிரண்டு நான்குகள் உட்பட ஆட்டமிழக்காது 102, கார்த்திக் ஏழு நான்குகளுடன் 44, சாம்பவன் மூன்று நான்குகளுடன் 18 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 45 ஓட்டங்களும் பெறப்பட்டன.

புருசோத்தமன் 10 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 34 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் தாரணன் 08 ஓவர்கள் பந்துவீசி 65 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் ஜிந்துஜன் 10 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 27 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் பாலகுமார் 05 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

248 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 38 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 131 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

தாரணன் ஒரு ஆறு, நான்கு நான்குகளுடன் 26, புருசோத்தமன் நான்கு நான்குகளுடன் 24, ரஜிந்தன், சதுர்சன் தலா 12 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 33 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஜனுதாஸ் 07 ஓவர்கள் பந்துவீசி 31 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளையும் பவீந்திரன் 04 ஓவர்கள் பந்துவீசி 16 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் ஜனுகுலன், நிரூஷன் 10, 07 ஓவர்கள் பந்துவீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் முறையே 17, 18 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள். (1-86)

களை கட்டுகிறது
பாடசாலைகளின்
கிரிக்கெட்
கொண்டாட்டம்
துடியன்

# தாச்சிச் சுற்றுப்போட்டியில் மயிலிட்டி அணிகள் வெற்றி

வலி.வடக்கு,ஓக.6

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகமும் மயிலிட்டி இளைஞர் ஒன்றிய விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்றுள்ளன.

மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகத்திற்கும் சாவற்காடு மகாத்மா விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் ஒற்றுமை விளையாட்டுக் கழகம் 16:06 பழம் என்ற அடிப்படையில் மகாத்மா விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்றுள்ளது.

மயிலிட்டி இளைஞர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்திற்கும் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே இடம்பெற்ற மற்றொரு போட்டியில் இளைஞர் ஒன்றிய விளையாட்டுக் கழகம் 15:07 புள்ளிகள் என்ற அடிப்படையில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகத்தை வெற்றிபெற்றுள்ளது. (1-86)

# ஹற்றன் நஷனல் வங்கிகளுக்கிடையே கிரிக்கெட் சமர்; கிண்ணத்தை வென்று சம்பியனானது நெல்லியடிக் கிளை

வலி.வடக்கு,ஓக.6




ஹற்றன் நஷனல் வங்கிக் கிளைகளிடையேயான கிரிக்கெட் சமர் ஒன்று அண்மையில் இடம்பெற்றது. கடந்த வாரம் யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தக் கிரிக்கெட் போட்டியில் யாழ்.குடாநாட்டிலுள்ள ஐந்து கிளைகளான யாழ்.மேற்றரக் கிளை, ஸ்ரான்லி வீதிக் கிளை, சுன்னாகம் கிளை, மானிப்பாய் கிளை, நெல்லியடிக் கிளை என ஐந்து கிளைகளும் நான்கு அணிகளாகக் களமிறங்கி மோதிக்கொண்டன.

ஐந்து பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட அறுவர் கொண்ட அணிகளே மோதியுள்ளன. லீக் சுற்றுமுறை கொண்ட இப்போட்டிகளில் ஆரம்பப் போட்டியாக யாழ். 'ஏ' அணியை எதிர்த்து சுன்னாகம் அணி ஆடியது. அதில் யாழ். 'ஏ' அணி வெற்றி பெற இரண்டாவது போட்டியில் நெல்லியடிக் கிளையை எதிர்த்து யாழ். 'பி' அணி களமிறங்கியது. இதில் நெல்லியடிக் கிளையினர் வெற்றி பெறவே 3ஆவது போட்டியாக யாழ். 'ஏ' அணியை எதிர்த்து நெல்லியடிக கிளை மோதியது. எனினும் யாழ். 'ஏ' அணி வெற்றியீட்டி அடுத்த நான்காவது போட்டியாக சுன்னாகம் அணியை எதிர்த்து யாழ். 'பி' அணி ஆடியது. இதில் யாழ். 'பி' அணி தோல்வியைத் தழுவிக்கொள்ளவே ஐந்தாவது போட்டியாக யாழ். 'பி' அணியை எதிர்த்து யாழ். 'ஏ' அணி மோதிக்கொண்டது. இதிலும் யாழ். 'பி' அணி தோல்வியைக் கண்டது.

அடுத்து 6ஆவது போட்டியாக இறுதிப் போட்டிக்கு எந்த அணி தெரிவாகும் என்ற போட்டியில் சுன்னாகக் கிளையை எதிர்த்து நெல்லியடிக் கிளையினர் விறுவிறுப்பாக மோதிக்கொண்டு வெற்றியீட்டி இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகினர்.

இறுதிப் போட்டியில் யாழ்.'ஏ' அணி நெல்லியடிக் கிளை அணி ஆகியன மோதிக் கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி அணி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவரில் 56 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. யாழ். 'ஏ' அணி 42ஓட்டங்களுடன்சுருண்டு கொண்டது. இறுதியாக சம்பியன் கிண்ணம் நெல்லியடிக் கிளையின் வசமானது. (50)

# கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சிறுப்பிட்டி ஜனசக்தி சம்பியனானது



வலி.வடக்கு,ஓக.6

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ''பி'' அணிகளுக்கு இடையேயான ஆட்டத்தில் சிறுப்பிட்டி ஜனசக்தி விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சிறுப்பிட்டி ஜனசக்தி விளையாட்டுக் கழகமும், ஆவரங்கால் பாரதி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்த ஆட்டத்தில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை ஜனசக்தி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

முதல் சுற்றில் இரு அணிகளும் இறுக்சந்தைக் காட்டியபோதிலும் பாரதி விளையாட்டுக் கழகத்தினால் தொடர்ந்து பேண முடியவில்லை. முதல் சுற்று 25.11 புள்ளிகள் என்ற அடிப்படையில் ஜனசக்தி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

இரண்டாம் சுற்றிலும் ஜனசக்தி விளையாட்டுக் கழகம் 25:15 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. (1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது மிகப்பெரிய மலையில் ஏறிய 11 வீரர்கள் பலியென அச்சம்

இஸ்லாமாபாத், ஒகஸ்ட், 06

உலகிலேயே உயரத்தில் இரண்டாவது இடத்தை வகிக்கும் வட பாகிஸ்தானிலுள்ள 'கே.2' என்னும் மலையின் உச்சியை அளக்க முற்பட்ட மலையேறும் வீரர்களில் 11 பேர் பலியாகிவிட்டனர் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

25 மலையேறும் வீரர்கள், வெள்ளிக்கிழமை இம்மலையின் உச்சியை அடைந்தார்கள். இவர்களில் 9 பேர் பனிப் பொழிவில் சிக்குண்டனர். அவர்களைப் பிணைத்திருந்த கயிறுகளும் பனிமலைச் சரிவால் அள்ளுண்டு போய்விட்டன. அவர்களும் அடித்துச் செல்லப்பட்டு விட்டார்கள் என நேரில் கண்ட சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

மற்றுமொரு வீரர் விழுந்து பலியானார் என்று கூப்படுகின்றது. பொதிகள் சுமக்கும் மற்றுமொருவர், சடலமொன்றை மீட்கச் சென்று, பனிச்சரிவில் புதையுண்டு பலியானார்.

இம்மலையேறும் வீரர்களில் கொரியர்கள், பாகிஸ்தானியர், நேபாளிகள், ஒரு டச்சுக்காரர், ஒரு இத்தாலியர் ஆகியோர் அடங்குவர் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளார்கள். 'கே 2' என்னும் இம்மலை, 8.611 மீற்றர் (28, 251 அடி) உயரமானது என அநேகர் கணிப்பீடு செய்துள்ளனர். ஒரு சில நூற்றுக் கணக்கானோரே, இதன் உச்சியை அடைந்துள்ளனர். இம் முயற்சியில் டசின் கணக்கானோர் பலியாகியுள்ளனர் என்றும் அவர்கள் கூறியுள்ளார்கள்.

வெள்ளிக்கிழமை மலை உச்சியை அடைந்தவர்களில் காணாமற் போனோரைக் கண்டுபிடிப்பதற்காக, மீட்புக் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் ஏற்பாட்டுக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

(சி)


"கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார் அவர் ஆசீர்வதிப்பார்"
(சங்: 115:12)

**பிரதிஷ்டை ஆராதனை அழைப்பு**

**இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்**

இன்று (06.08.2008) புதன்கிழமை புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தினை பிரதிஷ்டை செய்யவுள்ளோம். இந்நிகழ்விற்கு தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

நேரம்: முற்பகல் 10.00 மணி
போதகர்: அ.அருள்ராஜா
இடம்: தேவவார்த்தை மிசனறி ஊழியர்கள், விசுவாசிகள்

கரம்பன் கிழக்கு,
ஊர்காவற்றுறை. (76962)

**தேவவார்த்தை மிசனறிசபை.**





குருவே துணை

**முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 23 ஆவது குருபூசை தினம்**

காலம்: நாளை (07.08.2008) வியாழக்கிழமை
இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்

வழமைபோல் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெறும் விஷேட பூசை, அபிஷேக ஆராதனைகளுடன் குருபூசை நிகழ்வு இடம்பெறும்.

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.
சந்நிதியான் ஆச்சிரமம்.
(சி/554037)



**இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து**




முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் இல.48, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.திருமதி உதயராசா- சுபாஜினி தம்பதியரின் செல்வப் புதல்வி **பிரணவிகா** தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று (06.08.2008) புதன்கிழமை தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை பன்றிக் கோட்டுப் பிள்ளையாரின் துணையோடு, நோய், நொடியின்றி சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துபவர்கள்:

அன்பு அப்பா, அம்மா, அண்ணா, அம்மம்மா, அச்சா மாமா (கொழும்பு), முல்லைத்தீவைச் சேர்ந்த அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா குடும்பம், பெரியப்பா குடும்பம் (கனடா), அத்தை குடும்பம் (நோர்வே), பாட்டி மற்றும் உற்றார், உறவினர்கள்.

திரு.திருமதி உயதராசா (அப்பா, அம்மா).
48, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்
(76830)



**புலமைப்பரிசில் திட்டம் 2008**

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science 4 Months ~~10,750~~ 2,150 | Honours Diploma in Computer Science 5 Months ~~13,000~~ 2,600 | Diploma in Web page Designing 4 Months ~~10,750~~ 2,150 |
| Diploma in Graphic Designing 4 Months ~~10,750~~ 2,150 | Diploma in Desktop Publishing 4 Months ~~10,000~~ 2,000 | Diploma in Hardware Engineering 3 Months ~~10,000~~ 2,000 |
| Diploma in AutoCAD 3 Months ~~10,000~~ 2,000 | Diploma in Microsoft Office 3 Months 1,500 | Accounting Package 3 Months ~~10,750~~ 2,150 |

80% OFF

மாணவர் நலன்கருதி Lab இணையும் இணைத்துள்ளது

வரையறையற்ற செய்முறைபயிற்சி

Multimedia Projector மூலமான விரிவுரைகள்

50% OFF

Diploma in multimedia ~~5,500~~ 2,750
Diploma in Video Editing ~~6,500~~ 3,250

**ஆரம்பம்:**
08/08/2008- 09 or 02
09/08/2008- 09 OR 01
10/08/2008- 09 OR 01
11/08/2008- 09PM
13/08/2008- 02PM

**COMPUTER EXPRESS**
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#167, KASTHURIYAR RD, JAFFNA. 021 222 8250


## நேற்றைய (05.08.2008) உதயனில் வெளியான புலமைப்பரிசில் பரீட்சை விசேட மாதிரி வினாத்தாள் 02 இற்கான விடைகள்

### வினாத்தாள் - 01

| | | | |
|---|---|---|---|
| 01. 2 | 02. 3 | 03. 2 | 04. 3 |
| 05. 2 | 06. நிஷாம் | 07. ஷாம் | 08. 3 |
| 09. 2 | 10. 1 | 11. 2 | 12. 3 |
| 13. 9m | 14. 3 | 15. 3 | 16. 2 |
| 17. 1 | 18. 1 | 19. 10.20 | 20. வியாழன் |
| 21. 27 | 22. 3 | 23. 2 | 24. 3 |
| 25. 3 | 26. 2 | 27. 3 | 28. 2 |
| 29. 3 | 30. 6 | 31. 3 | 32. 3 |
| 33. 2 | 34. 7cm | 35. 4மணித்தியாலம் | |
| 36. 34 | 37. 3 | 38-2 | |
| 39. 3 | 40. 1 | | |

### வினாத்தாள் - II

| | |
|---|---|
| 01. வயல் | 02. நீர் |
| 03. சிறுசிறு/மெல்லமெல்ல | 04. கழனி/ வயல் |
| 05. ருகு+ அருகே | 06. தொலைதூரம்/நீண்ட தூரம் |
| 07. மனிதர்கள் | 08. மலை |
| 09. மலைக்கு/ பருவத்திற்கு | 10. வயலுக்கு/கழனிக்கு |
| 11. Stamps | 12. What is this |
| 13. அப்பா பால்குடியுங்கள், நன்றிமகள் | 14. கோதுமை |
| 15. முசு முசுக்கை | 16. எள்ளு, |
| 17. இக்கரி | 18. நிலக் கடலை |
| 19. 3 | 20.3 |
| 21. 3 | 22.2 |
| 23. 1 | 24.3 |
| 25. 2 | 26.3 |
| 27. 3 | 28.2 |
| 29. 1 | 30.4 |
| 31. 2 | 32.5 |
| 33. நரம்புக்கருவி | 34. தோற்கருவி |
| 35. கஞ்சக்கருவி | 36. சுவட்டு நிகழ்ச்சி |
| 37. மைதான நிழ்ச்சி | 38. மைதான நிகழ்ச்சி |
| 39. 5.50சதம் | 40. 35 ரூபா |
| 41. சுரேஸ் | 42. 26kg 925g |
| 43. மு.ப 9.15 | 44. 80l |
| 45. 33.44mm | 46. 2 |
| 47. 3 | 48. 3 |
| 49. 2 | 50. 2 |
| 51. 900l | 52. 2,700l |
| 53. 8,100l | 54. 785 ரூபா |
| 55. 4,500l | 56. 15,300l |
| 57. 62 பொருத்தமான கருத்துள்ள வாக்கியங்கள். | |

விடைகளில் சந்தேகங்கள் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளலாம்.
011-2399666/071-6850005/071-4273035

## வேடிக்கைக்காக தீ மூட்டிய சிறுமிக்கு எரிகாயம்

யாழ்ப்பாணம்,ஒக. 6

காலில் துணியை சுற்றிவிட்டு தீயிட்டு வேடிக்கை பார்த்த ஆறு வயதுச் சிறுமி எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை கச்சாயில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த ஏ. கார்த்திகா (வயது 6) என்பவர் காலில் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (202-207)

## ஆனைக்கோட்டை விவசாயிகளுக்கு உரமானியம்

நவாலி,ஒக. 6

ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளர் பிரிவில் நெற்செய்கை மேற்கொள்பவர்களுக்கு உரமானியம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான படிவங்கள் ஆனைக்கோட்டை விவசாய சம்மேளத்தினால் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

(202-100)

## வீட்டுத் தோட்டச் செய்கைக்கு உதவி

எழுவைதீவு முருகவேள் வித்தியாலய மாணவர்களின் பெற்றோர்களிடையே வீட்டுத் தோட்டச்செய்கையை ஊக்குவிக்க 'லீட்ஸ்' நிறுவனம் உதவி செய்து வருகின்றது.

முதற்கட்டமாக 35 பெற்றோருக்கு வீட்டுத்தோட்டச் செய்கைக்கான மூலப் பொருள்கள் மற்றும் பூவாளி, விதை தானியங்கள், நாற்றுக்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

(202-325)


**விற்பனைக்கு**

நிலை, யன்னல், வளைகள் 14 முழம், பனை மரங்கள் 7 என்பன விற்பனைக்குண்டு.

**158/4, தாசன் பாம்**
கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/554039)



**தவறிவிட்டது**

பொன்னாலை தெற்கு, சுழிபுரம் என்னும் முகவரியுடைய சபாபதி சிவநாதன் என்பவரது தேசிய அ. அட்டை மூளாய்க்கும் பொன்னாலைச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (76978)



**மரண அறிவித்தல்**

*திருமதி ஜெகசோதி நடராஜா*

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான திருமதி ஜெகசோதி நடராஜா 03.08.2008 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சித்தன்கேணியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை - கௌரியம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மரு மகளும் நடராஜாவின் (சித்தன்கேணி) அன்பு மனைவியும் சசிகலா, கௌரி, தாரணி (திருமகள்), தனேந்திரன், லக்சுமிதேவி ஆகியோரின் அன்புத் தாயும் ராஜகோபால், ரமேசன், தனஞ்ஜெயன், துசி ஆகியோரின் மாமியும் அமரர் தம்பிப்பிள்ளை, திருமதி பத்மசோதி, திருமதி புவனசோதி, திருமதி தவசோதி, திருமதி ரத்தினசோதி, திருமதி சிவசோதி, ஆனந்தக்குமார், காந்தகுமார், சூரியகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.08.2008) புதன்கிழமை காலை 8 மணி முதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் (591, காலி வீதி, கல்கிசை) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கல்கிசை பொதுமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கணவர் - நடராஜா,
மகள் - லக்சுமிதேவி தனஞ்ஜெயன்.

12 3/4, புகையிரத வீதி, வெள்ளவத்தை.
T.P.: 2505325
(சி/554034)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஒலிம்பிக் நினைவுகள் 7




### 10 ஆவது ஒலிம்பிக் (1932)

பத்தாவது ஒலிம்பிக் போட்டி, அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சலீஸில் நடைபெற்றது. 1932 ஆம் ஆண்டு ஜூலை 30 முதல் ஒகஸ்ட் 14ஆம் திகதி வரை நடைபெற்ற இப் போட்டியில் 37 நாடுகளில் இருந்து 126 மகளிர் உட்பட 1332 பேர் பங்கேற்றனர். 14 வகையான விளையாட்டுக்களில் 116 பிரிவில் போட்டிகள் நடைபெற்றன.

உலகம் முழுவதும் பெரும்பாலான நாடுகளில் பஞ்சம் தலைவிரித்தாடியதால் அதிகமான நாடுகள் இப்போட்டியில் பங்கேற்கவில்லை. அதற்கு முந்தையப் போட்டியில் பங்கேற்ற நாடுகளிலிருந்து ஏறக்குறைய பாதி வீரர்களே பங்கேற்றிருந்தனர்.



அப்போதைய அமெரிக்க அதிபர் ஹெர்பர்ட் ஹூவர் இப்போட்டியின் நிகழ்ச்சிகளில் பங்கேற்கவில்லை. போட்டியை நடத்திய நாட்டின் அதிபர் கலந்து கொள்ளாதது, ஒலிம்பிக் வரலாற்றில் அதுவே முதல் முறை.

9ஆவது ஒலிம்பிக் போட்டியை ஏற்று நடத்த லாஸ் ஏஞ்சலீஸ் உடன் வேறு நாடுகள் போட்டியிடவில்லை.

இந்தப் போட்டியில் முதல்முறையாக ஒலிம்பிக் கிராமம் அமைக்கப்பட்டது. பால்டுவின் மலையில் உருவாக்கப்பட்டது.

முதல் முறையாக பதக்கம் வழங்குவதற்காக மேடை அமைக்கப்பட்டது.

ஆடவர் ஹொக்கிப் போட்டியில் 3 நாடுகளே பங்கேற்றன. எதிர்கொண்ட இரு நாடுகளிடமும் அமெரிக்கா மோசமான தோல்வியைத் தழுவியது. இந்தியாவிடம் 1-24 என்றும், ஜப்பானிடம் 2-9 என்ற கோல் கணக்கிலும் தோல்வியுற்றது.

தொழில்முறை வீரராகத் திகழ்ந்ததால் பின்லாந்து தடகள வீரர் பாவோ நுர்மி, இப் போட்டியில் பங்கேற்கத் தடைவிதிக்கப் பட்டார்.

போலந்தைச் சேர்ந்த ஸ்டானிசவர், மகளிருக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். 4 ஆண்டுகளுக்குப் பிறகு அதே பிரிவில் வெள்ளி பதக்கத்தை வென்றார். அதன் பின்னர் அவர் பெண் தன்மையற்றவர் என்பது கண்டுபிடிக்கப்பட்டு, பங்கேற்கத் தடைவிதிக்கப்பட்டார்.

### 11ஆவது ஒலிம்பிக் (1936)

11ஆவது ஒலிம்பிக் போட்டி 1936 ஒகஸ்ட் 1 முதல் 16 வரை ஜேர்மனியின் பெர்லினில் நடைபெற்றது.

49 நாடுகளிலிருந்து 3,632 ஆடவரும், 331 மகளிரும் (மொத்தம் 3,963 பேர்) பங்கேற்றனர். 19 விளையாட்டுகளில் 129 பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன.

எந்த இடத்தில் நடத்துவது என்பது குறித்து முதல் முறையாக வாக்கெடுப்பு நடத்தி முடிவு செய்யப்பட்டது. 1936 இல் பெர்லினில் போட்டியை நடத்துவது என 1931இல் முடிவு செய்யப்பட்டது. ஆனால், 1933 இல் அடால்ஃப் ஹிட்லரின் தேசிய சோஷலிச ஜேர்மன் தொழிலாளர் கட்சி (நாஜி கட்சி) ஆட்சியைப் பிடித்தது.

ஆரிய இனவாதத்தை உயர்த்திப் பிடிக்க இதை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்ள நாஜி கட்சி முடிவு செய்தது. ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்களே ஜேர்மனி சார்பில் போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர். இப்போட்டியில் ஜேர்மனி அதிக பதக்கங்களை வென்றாலும். 4 தங்கம் வென்ற ஜெஸ்லி ஓவலை போன்ற ஆப்பிரிக்க - அமெரிக்க வீரர்களும் தங்கள் திறமையை நிரூபித்தனர். பெர்லினில் ஜிப்ஸிக்கள் போன்றவர்கள் கைது செய்யப்பட்டு சிறப்பு முகாம்களில் அடைக்கப் பட்டனர்.

### அந்த நாள் ஞாபகம்

அது 1936 ஆம் ஆண்டு கிழக்கு ஐரோப்பா முழுவதும் ஹிட்லரின் நாஜி கொள்கைகள் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த நேரம். ஒலிம்பிக் போட்டியை நடத்த பெர்லின் நகரம் தயாரானது. 'சர்வாதிகாரி' அடால்ப் ஹிட்லர், விளையாட்டிலும் தனது ஆரிய இனத்தின் வலிமையை உலகிற்குக் காட்ட இப்போட்டியை வாய்ப்பாக எண்ணியிருந்தார்.

**இன்னும் 2 நாள்களே எஞ்சியுள்ளன......**

அதில்தான் பங்கேற்கிறார் 22 வயதாகும் அமெரிக்கத் தடகள வீரர் ஜெஸ்லி ஓவன்ஸ். ஆனால் ஹிட்லர் அந்தக் கறுப்பரின் திறமையை சிறிதும் மதிக்கவில்லை. கறுப்பர்கள் வலிமையற்றவர்கள் எனச் சாடினார். அப்போது இன வேற்றுமை வேறு தலைவிரித்தாடிய நேரம். அதையும் மீறி 4 தங்கப்பதக்கங்களைக் கைப்பற்றி ஹிட்லரின் வாயையும் அடைத்தார் ஜெஸ்லி ஓவன்ஸ்.

100 மீற்றர் ஓட்டத்தில் சக நாட்டு வீரர் ரால்ப் மெட்கைய்ப்பை பின்னுக்குத் தள்ளி 10.3 விநாடிகளில் இலக்கை எட்டி முதல் தங்கத்தைக் கைப்பற்றினார். இரண்டாவது தங்கம் நீளம் தாண்டுதலில் கிடைத்தது. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் பிரதான போட்டிக்கான தகுதிப் போட்டியில் முதல் 2 வாய்ப்புகளை 'பவுல்' செய்துவிட்டார். உடன் பங்கேற்ற ஜேர்மனியைச் சேர்ந்த முன்னிலை வீரர் லஸ்லாங் ஓவனுக்கு அப்போது ஆலோசனை கூறுகிறார். 'தொடு கோட்டுக்கு முன்னதாகவே காலை வைத்துத் தாண்டிவிடு. - என்கிறார். அந்த வாய்ப்பில் பிரதான போட்டிக்குத் தகுதி பெற்று 26 அடி 5.5 அங்குலத்தை எட்டித் தங்கம் வென்றார். 200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் 3 ஆவது தங்கத்தை வெல்கிறார். இதில் முன்னிலை வீரர்களைப் பின்னுக்குத் தள்ளி 20.7 விநாடிகளில் முதலிடம் பிடித்தார்.

அதற்கு அடுத்த 4 ஆவது போட்டியிலும் ஓவன்ஸுக்குத் தங்கம் கிடைத்தது. 400 மீற்றர் தொடர் ஓட்டத்தில் தங்களது அணிக்குள்ளேயே ஏற்பட்ட குழப்பத்தில் ஓவன்ஸை உள்ளடக்கிய அமெரிக்கக் குழு உலக சாதனையுடன் (39.8 விநாடிகள்) தங்கம் வென்றது குறிப்பிடத்தக்கது. ஓவன்ஸின் சிறப்பை ஜேர்மனி அதிகாரிகள் குறைத்து மதிப்பிட்டபோது அந்நாட்டு ரசிகர்கள் ஹீரோவாகப் போற்றினர். 1984 இல் பெர்லினில் ஒரு தெருவுக்கு ஓவன்ஸ் பெயர் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




அராலி - கரைப்பிட்டி
கணபதீஸ்வரன் தேவஸ்தான
வருடாந்த மகோற்சவம்
07.08.2008 - 16.08.2008

கொடியேற்றம் - 07.08.2008 வியாழக்கிழமை
காலை 9 மணி
தேர் - 15.08.2008 வெள்ளிக்கிழமை
காலை 9 மணி
தீர்த்தம் - 16.08.2008 சனிக்கிழமை
காலை 9 மணி

தேவஸ்தானம்.

கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ஜெயமணி செந்திலிங்கம்
அவர்களின் அன்புத் தந்தை
தினகரர் வல்லிபுரம்
அவர்கள் 03.08.2008
ஞாயிற்றுக்கிழமை
இறைவனடி
சேர்ந்தமையயிட்டு ஆழ்ந்த
கவலையடைவதோடு
அன்னாரது
குடும்பத்தினருக்கும் எமது
அனுதாபத்தைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்

பாடசாலைச் சமூகம்,
யா/வட. இந்து மகளிர் கல்லூரி,
(சி/554044) பருத்தித்துறை.

திருவிழாக் காலத்தில் சிறுவரின் பெருவிழா
" சிறுவர் பிருந்தாவனம்"

இடம் - யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்
காலம் - 07.08.2008 முதல்
நேரம் - தினமும் பி.ப 02.00 மணி முதல் மாலை 07.00 மணி வரை

கண்காட்சி, சிறுவருக்கான உள்ளக விளையாட்டுக்கள், படக்காட்சிகள், சிறுவர் நாடகங்கள், இன்னும் பல...... மகிழ்வூட்டல் நிகழ்வுகள் காத்திருக்கின்றன.

"அனைவரும் அணி திரண்டு வாரீர்!
அனுமதி இலவசம்.

அமைப்புக்குழு,
யாழ்ப்பாணம்.

அனுசரணை:- SOND

31ஆம் நாள் நினைவாக



திருமதி
அன்னலட்சுமி
குமாரசாமி
(குஞ்சியம்மா)

தோற்றம்
04.03.1948

மறைவு
07.07.2008

அன்பின் உறைவிடமாய் அமைதியின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
எம்மோடு வாழ்ந்த காலங்களும்
கபடமற்ற உங்கள் திருமேனியும்
நெஞ்சக் கோயிலின் நிறை பொருளாய்
எமதகத்தில் என்றும் வீற்றிருக்கும்
காலன் சடுதியாய் எம்மிடமிருந்து
உங்களைப் பிரித்தாலும்-உங்கள்
ஆத்மா காமாட்சி அம்பாளின்
திருப்பாதங்களில் சாந்தியடைய
மனமுருகிப் பிரார்த்திப்போமாக!

(76981)

காளி கோயிலடி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

Spoken English & Grammer

அச்சடித்த பாடங்கள், பயிற்சிகள்
Preparation for Gr. 9, O/L, A/L Exams
Higher Studies (GAQ, B.A, 1st in Com., AAT)
Cambridge ESOL Exams
(Starters, Movers, Flyers, Pet..)
School Leavers, English Medium Students)
வெளிநாடு செல்லவுள்ளோர்
காலம்: ஒரு மாதம் - தினசரி வகுப்புகள்
ஆரம்பம்: 09.08.2008 (8 a.m.)
(வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும்)
By: Mr.B.Ruban (A/L English Teacher & BBA)
JTI, 45, Clock Tower Road, Jaffna.
077 9785749

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள லான்ஸர்
(Lancer) கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 021 222 9478

லொறி விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள இசுசு
லொறி உடன் விற்பனைக்கு
தொடர்பு:
ச. துரைராசா,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

மரண அறிவித்தல்
கந்தையா மகேந்திரன்



(ஓய்வுபெற்ற ஊழியர், யாழ். அலுமினியத் தொழிற்சாலை)

போயிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், மூளாய் தெற்கை வதிவிடமாகக் கொண்ட கந்தையா மகேந்திரன் 04.08.2008 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும், கோகுலரூபி, சுகந்தரூபி(சுவிஸ்), மோகனரூபி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சண்முகநாதன், சண்முகராஜா(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மகேஸ்வரி, பரமேஸ்வரி, இராஜேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசுப்பிரமணியம், கணேசமூர்த்தி, காலஞ்சென்ற மதியாபரணம் மற்றும் மகேஸ்வரி, குமரையா, முருகையா ஆகியோரின் அன்பு மைத்துனரும், யனுஷா, மதுசங்கர், தனு(சுவிஸ்), சுஜித்(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.08.2008) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
பா.பாலபாஸ்கரன் (மருமகன்).

மூளாய் தெற்கு,
சுழிபுரம்.
(76980)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஒலிம்பிக் நினைவுகள் 7



### 10 ஆவது ஒலிம்பிக் (1932)

பத்தாவது ஒலிம்பிக் போட்டி, அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சலீஸில் நடைபெற்றது. 1932 ஆம் ஆண்டு ஜூலை 30 முதல் ஒகஸ்ட் 14ஆம் திகதி வரை நடைபெற்ற இப் போட்டியில் 37 நாடுகளில் இருந்து 126 மகளிர் உட்பட 1332 பேர் பங்கேற் றனர். 14 வகையான விளையாட்டுக்க ளில் 116 பிரிவில் போட்டிகள் நடை பெற்றன.

உலகம் முழுவதும் பெரும்பாலான நாடுகளில் பஞ்சம் தலைவிரித்தாடியதால் அதிகமான நாடுகள் இப்போட்டியில் பங்கேற்க வில்லை. அதற்கு முந்தையப் போட்டியில் பங்கேற்ற நாடுகளிலிருந்து ஏறக்குறைய பாதி வீரர் களே பங்கேற்றிருந்தனர்.



அப்போதைய அமெரிக்க அதிபர் ஹெர் பர்ட் ஹூவர் இப்போட்டியின் நிகழ்ச்சிகளில் பங்கேற்கவில்லை. போட்டியை நடத்திய நாட்டின் அதிபர் கலந்து கொள்ளாதது, ஒலிம்பிக் வரலாற்றில் அதுவே முதல் முறை.

9ஆவது ஒலிம்பிக் போட்டியை ஏற்று நடத்த லாஸ் ஏஞ்சலீஸுடன் வேறு நாடுகள் போட்டியிடவில்லை.

இந்தப் போட்டியில் முதல்முறை யாக ஒலிம்பிக் கிராமம் அமைக்கப்பட்டது. பால்டுவின் மலையில் உருவாக் கப்பட்டது.

முதல் முறையாக பதக்கம் வழங் குவதற்காக மேடை அமைக்கப்பட்டது.

ஆடவர் ஹொக்கிப் போட்டியில் 3 நாடுகளே பங்கேற்றன. எதிர்கொண்ட இரு நாடுகளிடமும் அமெரிக்கா மோசமான தோல்வியைத் தழுவியது. இந்தியாவிடம் 1-24 என்றும், ஜப்பானிடம் 2-9 என்றகோல் கணக்கிலும் தோல்வியுற்றது.

தொழில்முறை வீரராகத் திகழ்ந்ததால் பின்லாந்து தடகள வீரர் பாவோ நுர்மி, இப் போட்டியில் பங்கேற்கத் தடைவிதிக்கப் பட்டார்.

போலந்தைச் சேர்ந்த ஸ்டானிசவர், மகளிருக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். 4 ஆண்டுகளுக்குப் பிறகு அதே பிரிவில் வெள்ளி பதக்கத்தை வென்றார். அதன் பின்னர் அவர் பெண் தன்மையற்றவர் என்பது கண்டுபிடிக்கப்பட்டு, பங்கேற்கத் தடைவிதிக்கப்பட்டார்.

### 11ஆவது ஒலிம்பிக் (1936)

11ஆவது ஒலிம்பிக் போட்டி 1936 ஒகஸ்ட் 1 முதல் 16 வரை ஜேர்மனியின் பெர்லினில் நடைபெற்றது.

49 நாடுகளிலிருந்து 3,632 ஆடவரும், 331 மகளிரும் (மொத்தம் 3,963 பேர்) பங்கேற்றனர். 19 விளையாட்டுகளில் 129 பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன.

எந்த இடத்தில் நடத்துவது என்பது குறித்து முதல் முறையாக வாக்கெடுப்பு நடத்தி முடிவு செய்யப்பட்டது. 1936 இல் பெர்லினில் போட்டியை நடத்துவது என 1931இல் முடிவு செய்யப்பட்டது. ஆனால், 1933 இல் அடால்ஃப் ஹிட்லரின் தேசிய சோஷலிச ஜேர்மன் தொழி லாளர் கட்சி (நாஜி கட்சி) ஆட்சியைப் பிடித்தது.

ஆரிய இனவாதத்தை உயர்த் திப்பிடிக்க இதை ஒரு சந்தர்ப்ப மாகப் பயன் படுத்திக் கொள்ள நாஜி கட்சி முடிவு செய் தது. ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்களே ஜேர்மனி சார்பில் போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப் பட்டனர். இப்போட்டியில் ஜேர்மனி அதிக பதக்கங் களை வென்றாலும். 4 தங்கம் வென்ற ஜெஸ்லி ஓவலை போன்ற ஆப்பிரிக்க - அமெரிக்க வீரர் களும் தங்கள் திறமையை நிரூபித் தனர். பெர்லினில் ஜிப்ஸிக்கள் போன்றவர்கள் கைது செய்யப்பட்டு சிறப்பு முகாம்களில் அடைக்கப் பட்டனர்.

#### அந்த நாள் ஞாபகம்

அது 1936 ஆம் ஆண்டு கிழக்கு ஐரோப்பா முழுவதும் ஹிட்லரின் நாஜி கொள் கைகள் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த நேரம். ஒலிம்பிக் போட்டியை நடத்த பெர் லின் நகரம் தயாரானது. 'சர்வாதிகாரி' அடால்ப் ஹிட்லர், விளையாட்டிலும் தனது ஆரிய இனத்தின் வலிமையை உலகிற்குக் காட்ட இப்போட்டியை வாய்ப்பாக எண்ணியிருந்தார்.

**இன்னும் 2 நாள்களே எஞ்சியுள்ளன......**

அதில்தான் பங்கேற்கிறார் 22 வயதாகும் அமெரிக்கத் தடகள வீரர் ஜெஸ்லி ஓவன்ஸ். ஆனால் ஹிட்லர் அந்தக் கறுப்பரின் திறமையை சிறிதும் மதிக்க வில்லை. கறுப்பர்கள் வலிமையற்றவர்கள் எனச் சாடினார். அப்போது இன வேற்றுமை வேறு தலைவிரித்தாடிய நேரம். அதையும் மீறி 4 தங்கப்பதக்கங் களைக் கைப்பற்றி ஹிட்லரின் வாயையும் அடைத்தார் ஜெஸ்லி ஓவன்ஸ்.

100 மீற்றர் ஓட்டத்தில் சக நாட்டு வீரர் ரால்ப் மெட்கைப்பை பின்னுக்குத் தள்ளி 10.3 விநாடிகளில் இலக்கை எட்டி முதல் தங்கத்தைக் கைப்பற்றினார். இரண்டாவது தங்கம் நீளம் தாண்டுதலில் கிடைத்தது. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் பிரதான போட்டிக்கான தகுதிப் போட்டியில் முதல் 2 வாய்ப் புகளை 'பவுல்' செய்துவிட்டார். உடன் பங்கேற்ற ஜேர்மனியைச் சேர்ந்த முன்னிலை வீரர் லஸ்லாங் ஓவனுக்கு அப்போது ஆலோசனை கூறுகிறார். 'தொடு கோட்டுக்கு முன் னதாகவே காலை வைத் துத் தாண்டிவிடு. - என்கிறார். அந்த வாய்ப்பில் பிரதான போட்டிக்குத் தகுதி பெற்று 26 அடி 5.5 அங்குலத்தை எட்டித் தங்கம் வென்றார். 200 மீற்றர் ஓட்டப் பந்த யத்தில் 3 ஆவது தங்கத்தை வெல்கிறார். இதில் முன்னிலை வீரர் களைப் பின்னுக்குத் தள்ளி 20.7 விநாடிகளில் முதலிடம் பிடித்தார்.

அதற்கு அடுத்த 4 ஆவது போட்டியிலும் ஓவன்ஸுக்குத் தங்கம் கிடைத்தது. 400 மீற்றர் தொடர் ஓட்டத்தில் தங்களது அணிக்குள் ளேயே ஏற்பட்ட குழப் பத்தில் ஓவன்ஸை உள்ளடக்கிய அமெ ரிக்கக் குழு உலக சாதனையுடன் (39.8 விநாடிகள்) தங்கம் வென்றது குறிப் பிடத் தக்கது. ஓவன்ஸின் சிறப்பை ஜேர்மனி அதிகாரிகள் குறைத்து மதிப் பிட்டபோது அந்நாட்டு ரசிகர்கள் ஹீரோவாகப் போற்றினர். 1984 இல் பெர்லினில் ஒரு தெருவுக்கு ஓவன்ஸ் பெயர் வைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.




அராலி - கரைப்பிட்டி
கணபதீஸ்வரன் தேவஸ்தான
வருடாந்த மகோற்சவம்
07.08.2008 - 16.08.2008

கொடியேற்றம் - 07.08.2008 வியாழக்கிழமை
காலை 9 மணி
தேர் - 15.08.2008 வெள்ளிக்கிழமை
காலை 9 மணி
தீர்த்தம் - 16.08.2008 சனிக்கிழமை
காலை 9 மணி

தேவஸ்தானம்.



கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ஜெயமணி செந்திலிங்கம்
அவர்களின் அன்புத் தந்தை
தினகரர் வல்லிபுரம்
அவர்கள் 03.08.2008
ஞாயிற்றுக்கிழமை
இறைவனடி
சேர்ந்தமையையிட்டு ஆழ்ந்த
கவலையடைவதோடு
அன்னாரது
குடும்பத்தினருக்கும் எமது
அனுதாபத்தைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்

பாடசாலைச் சமூகம்,
யா/வட. இந்து மகளிர் கல்லூரி,
(சி/554044) பருத்தித்துறை.



திருவிழாக் காலத்தில் சிறுவரின் பெருவிழா
"சிறுவர் பிருந்தாவனம்"

இடம் - யா/நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்
காலம் - 07.08.2008 முதல்
நேரம் - தினமும் பி.ப 02.00 மணி முதல் மாலை 07.00 மணி வரை

கண்காட்சி, சிறுவருக்கான உள்ளக விளையாட்டுக்கள், படக்காட்சிகள், சிறுவர் நாடகங்கள், இன்னும் பல...... மகிழ்வூட்டல் நிகழ்வுகள் காத்திருக்கின்றன.

"அனைவரும் அணி திரண்டு வாரீர்!
அனுமதி இலவசம்.

அனுசரணை:- SOND
அமைப்புக்குழு,
யாழ்ப்பாணம்.



31 ஆம் நாள் நினைவாக



திருமதி
அன்னலட்சுமி
குமாரசாமி
(குஞ்சியம்மா)

தோற்றம்
04.03.1948

மறைவு
07.07.2008

அன்பின் உறைவிடமாய் அமைதியின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
எம்மோடு வாழ்ந்த காலங்களும்
கபடமற்ற உங்கள் திருமேனியும்
நெஞ்சக் கோயிலின் நிறை பொருளாய்
எமதகத்தில் என்றும் வீற்றிருக்கும்
காலன் சடுதியாய் எம்மிடமிருந்து
உங்களைப் பிரித்தாலும்-உங்கள்
ஆத்மா காமாட்சி அம்பாளின்
திருப்பாதங்களில் சாந்தியடைய
மனமுருகிப் பிரார்த்திப்போமாக!

(76981)

காளி கோயிலடி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.



Spoken English & Grammer

அச்சடித்த பாடங்கள், பயிற்சிகள்
Preparation for Gr. 9, O/L, A/L Exams
Higher Studies (GAQ, B.A, 1st in Com., AAT)
Cambridge ESOL Exams
(Starters, Movers, Flyers, Pet..)
School Leavers, English Medium Students)
வெளிநாடு செல்லவுள்ளோர்
காலம்: ஒரு மாதம் - தினசரி வகுப்புகள்
ஆரம்பம்: 09.08.2008 (8 a.m.)
(வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும்)
By: Mr.B.Ruban (A/L English Teacher & BBA)
JTI, 45, Clock Tower Road, Jaffna.
077 9785749



விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள லான்ஸர் (Lancer) கார் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 021 222 9478



லொறி விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள இசுசு லொறி உடன் விற்பனைக்கு.

நீர்வேலி [illegible]க்கு, நீர்வேலி.



மரண அறிவித்தல்

கந்தையா மகேந்திரன்



(ஓய்வுபெற்ற ஊழியர், யாழ். அலுமினியத் தொழிற்சாலை)

போயிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், மூளாய் தெற்கை வதிவிட மாகக் கொண்ட கந்தையா மகேந்திரன் 04.08.2008 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும், கோகுலரூபி, சுகந்தரூபி(சுவிஸ்), மோகனரூபி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சண்முகநாதன், சண்முகராஜா(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மகேஸ்வரி, பரமேஸ்வரி, இராஜேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசுப்பிரமணியம், கணேசமூர்த்தி, காலஞ்சென்ற மதியாபரணம் மற்றும் மகேஸ்வரி, குமரையா, முருகையா ஆகியோரின் அன்பு மைத்துனரும், யனுஷா, மதுசங்கர், தனு(சுவிஸ்), சுஜித்(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.08.2008) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
பா.பால்பாஸ்கரன் (மருமகன்).

மூளாய் தெற்கு,
சுழிபுரம்.

(76980)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்.ஐ.அமைப்பைக் கட்டுப்படுத்தக் கூடாது பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் சொல்கிறார்

இஸ்லாமாபாத், ஒகஸ்ட் 06

உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐயை கட்டுப்படுத்தக் கூடாது என்று பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள இந்தியத் தூதரகம் மீது தீவிரவாதிகள் கடந்த மாதம் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் தூதரக அதிகாரி உட்பட 60 பேர் பலியானார்கள். இந்தத் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ உதவி செய்ததாக இந்தியா குற்றம் சாட்டியது. அமெரிக்கா, பிரிட்டனும் கூட இதை ஆமோதித்தன. ஐ.எஸ்.ஐ.யை பாகிஸ்தான் அரசு கட்டுப்படுத்த வேண்டும் என்று அமெரிக்காவும் இந்தியாவும் வலியுறுத்தின.

இந்த நிலையில், கராச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொழில் அதிபர்கள் கூட்டத்தில் பேசிய பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப், "பாகிஸ்தானின் பாதுகாப்பு அரணாக ஐ.எஸ்.ஐ. செயல்படுகிறது. ஆப்கானில் நடந்த தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.தான் காரணம் என்றும் அதை அரசு கட்டுப்படுத்த வேண்டும் என்றும் சிலர் கூறுகிறார்கள். ஐ.எஸ்.ஐ.யை பலவீனப்படுத்தினால் அது பாகிஸ்தான் இராணுவத்தைப் பலவீனப் படுத்துவதற்கு சமம். உலகம் நம்மை தீவிரவாத நாடு என்கிறது. அப்படி இல்லை என்பதை நாம் உணர்த்த வேண்டும். இதை நான் சொன்னால், என்னை அமெரிக்காவின் கைக்கூலி என்பார்கள்" - என்றார்.

இதற்கிடையில் பாகிஸ்தானில் பலுசிஸ்தான் மாகாணத் தலைநகர் குவெட்டாவில் உள்ள ஆளுநர் மாளிகையில் அமைச்சர்களின் கூட்டம் நேற்று நடந்தது. அதில் முஷாரப் பேசினார். அப்போது அவர், 'பலுசிஸ்தான் மாகாணத்தில் நடந்து வரும் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு இந்தியா தான் காரணம். தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களைக் கொடுத்து பாகிஸ்தானில் கலவரம் செய்ய இந்தியா தூண்டிவிடுகிறது' - என்று குற்றம் சாட்டினார்.

## ஈரானின் நவீன ஆயுதம்

தெஹ்ரான், ஒகஸ்ட் 06

"கடற் போர்களுக்குப் பயன்படக் கூடிய நவீன ஆயுத மொன்று ஈரானால் தயாரிக்கப் பட்டுள்ளது. இவ்வாயுத பரிசோதனை அண்மையில், வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இது ஓர் அபூர்வ ஆயுதம்" என, ஈரானின் கொமாண்டர் முகமது அலி- ஜபாரி, திங்கட்கிழமை தெரிவித்தார்.

"இது போன்றதோர் ஆயுதம் உலகில் வேறெந்த ஒரு நாட்டிலும் கிடையாது. இது சுமார் 300 கிலோ மீற்றர் வரை விரைந்து சென்று, இலக்கை துல்லியமாக தாக்கவல்லது" என்றும் அவர் குறிப்பிட்டார். ஈரானிய உத்தியோகபூர்வ ஐ.ஆர்.என்.ஏ. செய்தி நிறுவனத்திடம் இது குறித்துத் தெரிவித்த அவர் இதர விவரங்களை வெளியிடவில்லை.

# மலேசியா சென்றவுடன் விசா உடனடியாக அங்கு கிடைக்காது

## தத்தமது நாட்டில் பெற்றுக் கொள்ள வேண்டும்

கோலாலம்பூர், ஒகஸ்ட் 06

மலேஷியாவுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு வழங்கப்பட்டு வந்த உடனடி விஸா விநியோகமுறை, அந்நாட்டு அரசால் ரத்துச் செய்யப்பட்டு விட்டது.இந்தியா உட்பட பல்வேறு நாடுகளிலிருந்து, ஆண்டுதோறும் பெருந்தொகையானோர் மலேஷியா வருகின்றனர். அவர்களுக்கு இதுவரை அவ்வப்போது, விஸா வழங்கப்பட்டு வந்தது. மலேஷியா வந்தடைந்ததும் விஸா பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு இருந்தது.

இந்நடைமுறை நிறுத்தப்பட்டுவிட்டது. இனிமேல் மலேஷிய வருவோர், தத்தம் நாட்டிலேயே விஸா பெற்றுக் கொள்ள வேண்டும். இது குறித்து, மலேஷிய வெளியுறவு அதிகாரியொருவர், தலைநகரான கோலாலம்பூரில் ஊடகவியலாளருக்கு விளக்கமளித்தார்.

அவர் தம் விளக்கவுரையில், "மலேஷியாவில் உடனடி விஸா விநியோக நடைமுறை கடந்த மாதம் 27 ஆம் திகதி முதல் ரத்துச் செய்யப்பட்டு விட்டது. ஆதலால் இம்மாதம் முதல், விஸாவுடன் வருபவர்கள் மாத்திரமே, மலேஷியாவுக்குள் அனுமதிக்கப் படுவார்கள்" என்றார்.

"இந்த உத்தரவு இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகியவை உட்பட 27 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரமே பொருந்தும்" என்றும் அவர் கூறினார்.

# ஆப்கானில் கைதான பெண் தீவிரவாதி விசாரணைக்கு அமெ. அனுப்பப்பட்டார்

அல் - குவைதாவுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் 36 வயது பெண்ணொருவர் ஆப்கானில் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக நேற்று அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டார். அபியா சித்தீக் என்னும் இப்பெண் ஒரு பாகிஸ்தானியராவார் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

அமெரிக்கப் படை அதிகாரிகளை சுட்டுக் கொலை செய்ய எத்தனித்தார் என இவர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. இவர் முன்னர் அமெரிக்காவில் வசித்தவர். பின்னர் ஆப்கானுக்கு, அல் - குவைதா போராளியாகத் திரும்பியவர் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஆப்கானிலுள்ள காசி மாகாணத்தில், ஜூலை 17 ஆம் திகதி, அபியா சித்தீக் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். இவரை தடுப்பு முகாமிலிருந்து அழைத்து வரச் சென்ற அமெரிக்க இராணுவ அதிகாரி களை நோக்கி, சித்திக் துப்பாக்கியால் இரண்டு சுற்றுகள் சுட்டார் என இராணுவ அதிகாரி யொருவர் கூறினார்.

துப்பாக்கிச் சூடுகளிலிருந்து தம்மை சாதுரியமாக சுதாகரித்துக் கொண்ட இராணுவ அதிகாரிகளில், ஓரதிகாரி பதிலுக்குச் சுட்டார். அது அப்பெண்ணின் மார்பைத் தாக்கியது. அதன்பின்னர் அவர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டார் என்றும் அந்த இராணுவ அதிகாரி தொடர்ந்தார்.

# அணு ஒப்பந்தத்தின் முக்கியத்தை கட்சியினருக்கு விளக்கிக் கூறும் பொறுப்பு ராகுல் காந்தியிடம்

புதுடில்லி, ஓக. 06

அணுசக்தி ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை, காங்கிரஸ் பேச்சாளர்களுக்கு விளக்கிக் கூறும் பொறுப்பு, கட்சியின் பொதுச் செயலர் ராகுலிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இதுதொடர்பான விவரம் வருமாறு:-

அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடக்கவுள்ளது. அனைத்து அரசியல் கட்சிகளும், இதற்கான பணிகளில் தீவிரமாக இறங்கிவிட்டன. காங்கிரஸும் இதற்கான வேலை களை ஆரம்பித்துவிட்டது. தங்களின் ஐந்தாண்டு கால ஆட்சியின் சாதனையாக இந்தியா - அமெரிக்கா அணுசக்தி ஒப்பந்தத்தைப் பிரசாரத்தின்போது முன்னிலைப்படுத்தவுள்ளது.

அணுசக்தி ஒப்பந்தத்தால் நாட்டுக்கு ஏற்படும் பயன்கள் பற்றி, காங்கிரஸ் பேச்சாளர்களுக்கு, கட்சியின் பொதுச் செயலர் ராகுல் பாடம் நடத்தவுள்ளார். நாடாளுமன்றில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பின்போது, அணுசக்தி ஒப்பந்தம் குறித்த ராகுலின் பேச்சிற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. இதையடுத்து, இந்தப் பொறுப்பு ராகுலிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விரைவில் நடக்கவுள்ள கட்சியின் பேச்சாளர்களுக்கான மாநாட்டில், அணுசக்தி ஒப்பந்தம் குறித்து, ராகுல் விரிவாகப் பேசவுள்ளார்.



இலங்கைக் கடற்படையால், தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவதைக் கண்டித்து திராவிடர் கழகம் சார்பில் சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் அதன் தலைவர் கி. வீரமணி மற்றும் கட்சி நிர்வாகிகளைப் படத்தில் காணலாம்.

# சுசந்திகா தலைமையில் இலங்கை ஒலிம்பிக் குழு 8 வீரர், வீராங்கனைகள் பங்குபற்றுகின்றனர்

பீஜிங், ஒகஸ்ட் 06

சீனாவில் நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ள 29ஆவது ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றவுள்ள இலங்கை அணி நேற்று முன்தினம் பீஜிங்கை சென்றடைந்தது.

இலங்கையிலிருந்து 8 வீரர், வீராங்கனைகள் அடங்கிய ஒலிம்பிக் குழு போட்டிகளில் பங்குபற்றவுள்ளது. அணியில் 4 வீரர்களும், 4 வீராங்கனைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். குறுந்தூர ஓட்டவீராங்கனையான சுசந்திகா ஜெயசிங்க இக் குழுவுக்குத் தலைமை வகிக்கின்றார். தற்போது அமெரிக்காவில் பயிற்சிகளில் ஈடுபட்டிருக்கும் அவர், நாளை 7ஆம் திகதி அங்கிருந்து பீஜிங் சென்றடைவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் தொடக்க நிகழ்வில் இலங்கை தேசியக் கொடியை ஏந்திச் செல்லும் கௌரவம் சுசந்திகா ஜெயசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை ஒலிம்பிக் சங்கம் அறிவித்துள்ளது. இத் தொடக்க விழா நிகழ்வில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றார்.

2000ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்று கொடுத்தன் மூலம் இலங்கைக்குப் பெருமை சேர்த்தவர் சுசந்திகா ஜெயசிங்க என்பது குறிப்பிடத்தக்கது. 33வயதான அவர்தற்போது மூன்றாவது ஒலிம்பிக் தொடரில் பங்கேற்கவுள்ளார்.

இலங்கை ஒலிம்பிக் குழு தடகளம்:- சுசந்திகா ஜெயசிங்க, நதிகா லக்மலி (முகாமையாளர் - டம்மிக்க நந்தகுமார்)

பட்மிட்ரன்:- திலினி ஜெயசிங்க (பயிற்சியாளர் - பிரியந்த விஜயசேகர)

குத்துச்சண்டை:- அனுரத்த ரத்னாயக்க (பயிற்சியாளர் - வசந்த குமார)

துப்பாக்கி சுடுதல்:- ஈ.எம்.சேனநாயக்க (பயிற்சியாளர் - பிரிகேடியர் கே.டபிள்யூ. எடீமா)

நீச்சல் போட்டி:- மயூமி ரகீம், டானியல் லீ (பயிற்சியாளர் - ருவான் மனாவத்து)

பளுதூக்கல்:- சிந்தன விதானகே (பயிற்சியாளர் - ஆர்.பி.விக்கிரசிங்க)

## ஒலிம்பிக் துளிகள்......

* தொடக்க விழா நிகழ்ச்சியைக் காண, ஒரு லட்சத்து 60 ஆயிரம் பேர் 'பறவைக் கூடு' ஸ்டேடியத் தில் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.
* அமெரிக்க ஜனாதிபதி புஷ், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியாவின் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி உட்பட உலகம் முழுவதிலும் இருந்து முக்கிய தலைவர்களும், பிரமுகர்களும் தொடக்க விழாவில் கலந்து கொள்கின்றனர்.
* தொடக்க விழாவுக்கான ஒத்திகை, பீஜிங் நகரில் கடந்த ஒரு வாரமாக நடந்து வருகிறது. ஒலிம்பிக் சரித்திரத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு மிகப் பிரமாண்டமான அணிவகுப்பு, கலைநிகழ்ச்சிகள் மற்றும் வாண வேடிக்கைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# இங்கிலாந்து அணித் தலைவராக பீற்றர்ஸன்



லண்டன், ஓக. 06

இங்கிலாந்துக் கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக அதிரடி வீரர் கெவின் பீற்றர்ஸன் நியமிக்கப்பட்டுள்ளார். அணித்தலைமைப் பதவி தனக்குக் கிடைத்திருப்பது மிகப்பெரிய கௌரவம் மற்றும் சவால் என்று பீற்றர்ஸன் கூறியுள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் கடந்த 5 ஆண்டுகளாகத் தலைவராக இருந்த மைக்கல் வோகன் மற்றும் ஒருநாள் அணிக்கான தலைவர் கொலிங்வூட் ஆகிய இருவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமது பதவிகளை ராஜினாமாச் செய்தனர்.

இதையடுத்து டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கான இங்கிலாந்துத் தலைவராகப் பீற்றர்ஸன் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டார். தென்னாபிரிக்க அணிக்கு எதிராக நாளை லண்டன் ஓவல் மைதானத்தில் தொடங்கும் 4 ஆவது டெஸ்ட் போட்டியில் அவர் இங்கிலாந்து அணிக்குத் தலைவராகப் பொறுப்பேற்கிறார். அணியில் மைக்கல் வோகனுக்குப் பதிலாக ரவி போபாரா சேர்க்கப்பட்டுள்ளார்.

கெவின் பீற்றர்ஸன் தென்னாபிரிக்காவில் பிறந்து பின்னர் இங்கிலாந்துக் குடியுரிமை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அணித்தலைமைப் பதவி தனக்குக் கிடைத்த மிகப்பெரிய கௌரவம் என்றும், வோகன் மற்றும் கொலிங்வூட் தலைமையில் பல விடயங்களைத் தான் கற்றுக்கொண்டிருக்கின்றார் என்றும் பீற்றர்ஸன் கூறியுள்ளார்.

4ஆவது டெஸ்ட் போட்டிக்காக அறிவிக்கப்பட்டுள்ள இங்கிலாந்து அணி:- அலஸ்ரியர் குக், ரவி போபாரா, கெவின் பீற்றர்ஸன் (தலைவர்) , ஓயிஸ் [illegible] பட்டேல், போல் கொலிங்வூட், மற் பீறியர், பிளின்ரொப், கிரேமி சுவான், ஸ்ருவேட் பிராட், ஜேம்ஸ் அன்டர்ஸன், சைட்பொற்றம், றீம்லெட், ரைட்.

# இந்திய அணித்தலைவர் டோனிக்கு 'ராஜீவ்காந்தி கேல்ரத்னா' விருது!



புதுடில்லி, ஒகஸ்ட் 06

இந்திய விளையாட்டுத்துறையில் வழங்கப்படும் உயரிய விருதான 'ராஜீவ் காந்தி கேல்ரத்னா' விருதுக்கு ஒருநாள் மற்றும் ருவென்ரி/20 போட்டிகளுக்கான இந்திய அணித் தலைவர் மகேந்திரசிங் டோனி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் தடகள சம்பியன் மில்கா சிங் தலைமையில் நேற்றுமுன்தினம் நடந்த தேர்வுக்குழுக் கூட்டத்தில் இது உறுதி செய்யப்பட்டது. எனினும், இதுபற்றிய அதிகாரபூர்வமான அறிவிப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னணித் துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கருக்குப் பிறகு (1997 - 1998) கேல் ரத்னா விருது பெறும் 2 ஆவது கிரிக்கெட் வீரர் என்ற பெருமை டோனிக்குக் கிடைத்துள்ளது. ருவென்ரி/20 உலகக் கிண்ணப் போட்டியிலும் ஆஸ்திரேலியாவில் நடந்த முத்தரப்பு ஒருநாள் போட்டியிலும் டோனி தலைமையிலான இந்திய அணி சம்பியன் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

விஸ்வநாதன் ஆனந்த்(செஸ்), லியாண்டர் பயஸ் (டென்னிஸ்), கீத் சேத்தி (பில்லியாட்ஸ்), ரத்தோர் (துப்பாக்கி சுடுதல்), தன்ராஜ் பிள்ளை (ஹொக்கி) ஆகியோரும் கேல்ரத்னா விருது பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகா பாவம்; கதிரை இல்லாததால் அங்கும் இங்கும் அலைந்து திரிந்தாராம்

கொழும்பு, ஓக. 06

''சார்க்'' மாநாட்டில் அதிதியாகக் கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு அங்கு ஆசனம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. அவர் பாவம்; உட்காருவதற்குக் கதிரை இல்லாததால் அங்கும் இங்கும் அலைந்து திரிந்தார்'' - என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுநாடாளுமன்றில்கூறினார்.

ரணிலுக்கு அம்மாநாட்டில் ஆசனம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை என்று கூறி சபையில் நேற்று எழுப்பப்பட்ட சர்ச்சையின் போதே ரணில் இதைத் தெரிவித்தார்.

தனக்குக்கூட நீண்ட இழுபறியின் பிறகே முன்வரிசை ஆசனம் வழங்கப்பட்டது என்று கூறிய ரணில் ஆசன ஒதுக்கீட்டில் நல்லதொரு ஒழுங்கு பின்பற்றப்படவில்லை என்று சொன்னார்.

டி.எம். ஜயரட்ண போன்ற, முன்வரிசையில் அமரவேண்டிய சிரேஷ்ட அமைச்சர்கள் பின் வரிசையிலேயே அமர்ந்திருந்தனர் என்றும் அவர்களுக்குக் குடிப்பதற் குத் தண்ணீர் போத்தல்கள் கூட இருக்க வில்லை என்றும் ரணில் சொன்னார்.

ஆர். பிரேமதாஸாவின் ஆட்சியில் 'சார்க்' மாநாடு இடம்பெற்றபோது இவ்வா றான ஒழுங்கீனம்காணப்படவில்லைஎன்றுசொன்ன ரணில் இது மிகவும்கவலை தருகிறது என்றார்.

இதைவிடக் கவலையான விடயம், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அமர ஆசனம் இல்லாமல் அங்கும் இங்கும் அலைந்து திரிந்ததுதான் - என்றும் ரணில் மேலும் தெரிவித்தார். (அ-சி)

## வெள்ளாங்குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகள் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று விமானப் படையினர் தெரிவித்திருக்கின்றனர்.

எனினும் புலிகள் தரப்பிலிருந்து இத்தாக்குதல் தொடர்பில் தகவல்கள் எவையும் கிடைக்கப் பெறவில்லை. (அ)

## இடம்பெயர்ந்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடர்காலக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உணவுப் பொருள்களை வவுனியாவிலிருந்து எடுத்து வருவதில் இடர்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. ஆறு லட்சம் லீற்றர் ஐந்து லட்சமாகக் குறைப்பட்டு அந்த மண்ணெண்ணெய் யைக் கூட முழுமையாக எமது மாவட்டத் திற்குள் எடுத்துவர முடியவில்லை. இடம் பெயர்ந்த மக்களுக்கு தண்ணீர் வழங்குவதற்கு ஆயிரம் லீற்றர் நீர்த்தாங்கிகளை எடுத்துவருவதில் கூட இடர்கள் காணப்படுகின்றன. அனுமதிக்கப்படுகின்ற உணவு மற்றும் எரிபொருள்கள் அனுமதி மறுக்கப்படுகின்ற நிலை காணப்படுகின்றது - என்றார். (அ)

## மாவட்ட நிர்வாகம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொலைபேசி அழைப்புத் தொடர்பாக உடனடிப் பாதுகாப்புக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன, பல்வேறு இடையூறுகளினால் நொந்து போயுள்ள மாவட்ட மக்களுக்குச் சேவையாற்றிக் கொண்டிருக்கும் யாழ்.மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் இச் செயலால் அதிர்ச்சியுற்று தமது வேதனைகளையும் ஆதங்கத்தையும் வெளிக்கொண்டு வருகின்றனர்.

இச் சம்பவம் தொடர்பாக நிர்வாகத்தினர் மிகவும் அவதானமாக கலந்துரையாடிய போது, சுமுகமான சூழ்நிலையில் இருந்த யாழ்.மாவட்டத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் கஷ்டமான நிலைமைக்கு உட்படுத்தப்பட்டபோது உணவு விநியோகம், போக்குவரத்து, அடிப்படைக் கட்டமைப்பு அபிவிருத்தி, மக்களின் கல்வி, சுகாதாரம், மின்சாரம் போன்ற துறைசார்ந்த திணைக்கள செயற்பாடுகளை ஒருங்கமைத்தல் போன்றவற்றை ஓரளவாயினும் சுமுகநிலைக்கு மீட்டெடுத்து அனைத்து மக்களின் நலனையே நோக்கமாகக் கொண்டு மாவட்டச்செயலகம்செயற்பட்டுவருகின்றது.

செயலக உத்தியோதர்கள் நேரியசிந்தனையுடனும், அர்ப்பணிப்புடனும், தொலை நோக்கு பார்வையுடனும் வெளிப்படையாகவும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற நிர்வாகக் கட்டமைப்பில் அதிருப்தியுற்ற சில வேண்டாத சிந்தனை கொண்ட ஒரு சிலரினால் மாவட்டச் செயலகத்தில் வெடிகுண்டுவைக்கப்பட்டிருக்கின்றதென்று வெளியிடப்பட்ட தவறான செய்தியினால் விரக்தி அடைந்துள்ளனர்.

மாவட்ட நிர்வாகம் தொடர்பில் கருத்துக்களை வெளியிட விரும்புவர்கள் தமது கருத்துக்களை நேரடியாகவோ எழுத்து மூலமாகவோ அல்லது பத்திரிகை வாயிலாகவோ ஒளிவுமறைவின்றி தெரியப்படுத்துவதை வரவேற்கின்றோம். சிறந்த நிர்வாக செயற்பாடுகளை முன்னெடுக்க முனையும் மாவட்ட செயலக நிர்வாக செயற்பாடுகளுக்கு அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பைவேண்டி நிற்கின்றோம்- என்றுள்ளது (சி)

## ஜி.சீ.ஈ. உயர்தர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பமாகும் பரீட்சை இம்மாதம் 21ஆம் திகதி வரை முதற் கட்டமாக நடைபெறும். இரண்டாம் கட்டப் பரீட்சை இம்மாதம் 25 ஆம் திகதி ஆரம்பித்து அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் 2 இலட்சத்து 93 ஆயிரத்து 819 பரீட்சார்த்திகள் தோற்றவிருக்கின்றனர்.

ஒரு இலட்சத்து 99 ஆயிரத்து 62 மாணவர்கள் பாடசாலைப் பரீட்சார்த்திகளாகவும், 94 ஆயிரத்து 857 மாணவர்கள் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகவும் தோற்றவுள்ளனர்.

## 2 அனல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார்.

சம்பூரில் இந்தியாவுடன் இணைந்து மின் நிலையங்களை அமைக்க அரசு தீர்மானித்திருக்கிறதா என்றும் இதற்கான ஒப்பந்தம் இந்தியாவுடன் செய்யப்பட்டதா என்றும் - அவ்வாறு செய்யப்பட்டால் அந்த ஒப்பந்தத்தை அரசு நாடாளுமன்றத்தில் சமர்பிக்குமா என்றும் ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுர குமார திஸநாயக்க சபையில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மின்சார சபை ஊழியர்களின் ஓய்வூதிய காலம் தொடர்பாக ஜே.வி.பியின் எம்.பியான லக்ஷ்மன் நிபுணாராச்சி எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் ஜோன் செனவிரட்ண நேற்று சபையில் பதிலளித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே அநுர குமார திஸநாயக்க மேற்படி கேள்வியை ணைக் கேள்வியாக முன்வைத்தார். (சி)

# படையினர் சூட்டில் அராலியில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், ஓக 06

அராலிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் தம் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்த முயன்ற சமயமே தாம் அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் - அவர் அருகில் இருந்து மூன்று கைக்குண்டுகளையும் தாம் மீட்டதாக படையினர் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ். வைத்தியசாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டதாக தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## துப்பாக்கிச் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றிவளைப்புத் தேடுதலை நடத்தினர்.

இதேவேளை கரடியனாறுப் பகுதியில் இருந்து சுமார் 1.5 கிலோ நிறையுடைய கிளைமோர்குண்டு ஒன்றையும் பிஸ்டல் ஒன்றையும் மூன்று ஜெனரேற்றர்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## நல்லூர் ஆலயத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளும் இரவு 9 மணியிலிருந்து அடுத்த நாள் அதிகாலை 4.30 மணிவரை அமுலில் இருந்த ஊரடங்குச்சட்டம் நல்லூர் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு இன்று முதல் இரவு 9 மணியிலிருந்து அடுத்தநாள் அதிகாலை 4 மணிவரை அமுலில் இருக்கும் என்றுபடைத்தரப்பினர் அறிவித்ததாக ஊடக மத்திய நிலையம் நேற்று தெரிவித்தது.

நல்லூர் முருகன் ஆலயத்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் வரை இடம்பெறும். இந்தக் காலப் பகுதியில் மாத்திரமே இந்த ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் எனக் கூறப்பட்டது. (அ-சி)

## இந்திய - இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ச்சியையோ விரும்பவில்லை. அதனால் தான் இந்தியாவுடன் பொருளாதார ஒப்பந்தம் செய்வதை அவர்கள் எதிர்க்கின்றனர்.

'சீபா' ஒப்பந்தம் இந்நாட்டுக்கு நன்மையளிக்கக்கூடியது. இதனால் எமது இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பு அதிகரிக்கும். அரசு இந்த நல்ல வாய்ப்பைத் தவறவிடக்கூடாது.

அதற்கு எதிராகக் கிளம்பும் எதிர்ப்பை ஒரு பக்கத்தில் தள்ளிவைத்துவிட்டு இலங்கை அரசு இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

இந்தியா போன்ற நாடுகள்மீது சிலர் கொண்டிருக்கும் அர்த்தமற்ற எதிர்ப்புக் காரணமாக இலங்கை பல நல்ல வாய்ப்புகளை இழந்து வருகிறது.

சிலரின் அர்த்தமற்ற - சிறுபிள்ளைத்தனமான பிடிவாதமே இந்த ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பாக மாறியுள்ளது. இந்த எதிர்ப்பில் எந்த அர்த்தமும் கிடையாது.

இவ்வாறான ஒப்பந்தங்கள் மூலம் இரு தரப்பினரும் வெற்றிபெறும் ஒரு நிலை உருவாகும். எமது நாட்டுக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

சமாதானத்தையும் விரும்பாத, பொருளாதார வளர்ச்சியையும் விரும்பாத சிலரால் எழுப்பப்படும் எதிர்ப்புக்கு அடிபணியாமல் நாட்டுக்கு நன்மை தரக்கூடிய இவ்வாறான ஒப்பந்தங்களை இலங்கை, நாட்டுக்கு சாதகமான வகையில் பயன்படுத்த வேண்டும்.

உண்மையில் சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் இலங்கை வந்தபோதே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்க வேண்டும். சிலரின் தேவையற்ற எதிர்ப்பால் அது நடக்கவில்லை.

உலகில்பலநாடுகள்இந்தியாவுடன்பொருளாதார ஒப்பந்தம் செய்துகொள்ள விரும்புகின்றன. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியே அதற்குக் காரணம்.

ஆனால் குறுகிய மனம் படைத்தவர்கள் இந்த ஒப்பந்தத்தை எதிர்க்கின்றனர். பொருளாதாரத்தில் முன்னிலையில் நிற்கும் நாடுகளுடன் ஒன்றுசேர்ந்தால்தான் எமது நாடும் முன்னேறும்.

ஆகவே, குறுகிய மனம் படைத்தவர்களின் எதிர்ப்பை ஒதுக்கி வைத்துவிட்டு இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும். - என்றார். (அ-சி)

## ஜூலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படி, ஜூலை மாதத்தில் 42 பேர் காணாமல் போயிருப்பதாகத் தெரிய வந்துள்ளது. ஜூலை மாதத்தில் 154 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் பலர் விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் தெரிவித்துள்ளது.

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் பலவற்றையும் புலிகள் கைப்பற்றியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருள்கள் ஆர்.பி.ஜி.-01, ஆர்.பி.ஜி. ஷெல்-01, ரி-56-2ரகதுப்பாக்கி-01, குண்டுகள்-23, கிளைமோர்கள்-03, இணைப்பியுடன் ஏ.கே.ரவைகள்-745, ஏ.கே.ரவை கள்-8,162 என்பவையாகும். இதேவேளை, இத்தாக்குதலில் ஐந்து படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 11பேர் காயமடைந்துள்ளனர் என்று படைத்தரப்புத் தெரிவித்துள்ளது. (அ)

## பாலமோட்டையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்தினம் காலை 10 மணியளவில் பெரியளவிலான பிற்களச்சூட்டாதரவுடன் படைத்தரப்பினர் பாரிய முன்னேற்ற நடவடிக்கையை மேற்கொண்டனர். என்றும் எனினும் அதற்குத் தாங்கள் மேற்கொண்ட முறியடிப்புச் சமரில் படைத்தரப்பினர் பாரிய இழப்புகளுடன் பின் வாங்கிச் சென்றுவிட்டனர் என்றும் விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

திங்களன்று புலிகளுடன் மோதல் இடம்பெற்றதை உறுதிப்படுத்திய படைத்தரப்பு அன்றைய தினம் இடம்பெற்ற சமரின் போது விடுதலைப் புலிகளில் ஐவர் கொல்லப்பட்டதுடன், ஆறு பேர் காயமடைந்தனர் என்று அறிவித்தது.

அதே சமயம் கடந்த ஞாயிற்றுக் கிழமை வெள்ளாங்குளம் பகுதியில் இடம்பெற்ற கடுஞ் சமரில் உயிரிழந்த சிப்பாய் ஒருவரின் சடலத்தைத் தாங்கள் மீட்டதுடன் இராணுவத்தினர் கைவிட்டுச்சென்ற பல வெடி பொருள்களையும் மீட்டனர் என்று புலிகள் கூறியுள்ளனர். (அ-சி)

IDM
இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனிக்கல்லூரி
www.idm.lk
BTEC Diploma Courses
(International Diploma)
அனேக உத்தியோகத்தரின் வேண்டுகோளுக்கு இணங்க ஞாயிற்றுக்கிழமை முழு நேர வகுப்பு- ஆரம்பம்
10/08/2008
விடுமுறை கால விசேட வகுப்புக்கள்
ICT (Gr 10 & 11), GIT (A/L)
Other Courses
Ms Office, ICDL, vb.net, Java, PHP & MySQL,Web Desining
kids program - சிறுவர்களுக்கான பயிற்சி நெறி
216 நாவலர் வீதி யாழ்ப்பாணம்.
T.P-NO: 021-2229901

SUBARA (14)
சித்தன்கேணி
தரம் - 5
கருத்தரங்கும் மாதிரிப்பரீட்சையும்
09.08.2008, 10.08.2008
ஆசிரியர்-கைலைநாதன்
வெளி மாணவர்களும் பங்கு பற்றலாம்.
Spoken English By. BRITTO
புதிய பிரிவு: 05.08.2008 காலை 8.00 மணி.

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்
* A/L கலை, வர்த்தக, கணிதப் பிரிவுகள்
* GR 1முதல் O/L வரை.
* O/L DAY CLASS
* ENG. MEDIUM - 6 To 11
* ENG. LITERATURE 10+11
* GR 4- புலமைப்பரிசில் 5பயிற்சிப் பரீட்சைகளுடன்
பேச எழுத வாசிக்க
* SINHALA

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna.
Phone : 021 222 8250, 0777 222422
Diploma in Computerized Accounting
Quick Books + ACCPAC + MYOB
1) 07/08/2008 - 02.00PM
2) 09/08/2008 - 09.00AM
3) 10/08/2008 - 09.00AM
4) 12/08/2008 - 02.00PM

Microsoft Certified Systems Engineer(USA)
* செய்முறைகளுடன கூடிய நிறைவான விரிவுரைகள்
* Microsoft நிறுவன அதிபர் Bill Gates இன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
* Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
* வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
Become a Engineer
புதிய பிரிவுகள் ஆரம்பம் 09.08.2008 08.00 a.m.
பதிவு செய்வோருக்கு விசேட சலுகைகள்
விபரங்கள் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP

மாபெரும் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்.
பூபால சிங்கம் புத்தக சாலை
நல்லூர் உற்சவகால விற்பனை நிலையம்,
நல்லூர் சிவன் கோவில் முன்பாக

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விசேட பரீட்சை வெளியீடு - 05

ஆசிரியர்:-

திரு.து.திலீப்குமார்,

விவேகானந்தா கல்லூரி, கொழும்பு.



Model Examination For Grade Five Students for Selection to School and for the Award of Bursaries, August 2008

மாணவர்களைப் பாடசாலைக்குத் தெரிவு செய்வதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமான தரம் 05 மாணவர்களுக்கு நடத்தப்படும் புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை, ஓகஸ்ட் 2008

## வினாத்தாள் - I

மாணவர் சுட்டெண்- ............................ நேரம்:- 45 நிமிடங்கள்

முதலாம், இரண்டாம் வினாக்களில் தரப்பட்ட உருக்களில் இரண்டு உருக்கள் ஏதோ ஒரு வகையில் தொடர்புடையன. அவ் உருக்களுக்குரிய எழுத்தைக் குறிக்கும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01.



A B C D E

1) A யும் D யும். 2) B யும் E யும். 3) C யும் E யும்.

02.



A B C D E

1) A யும் D யும். 2) C யும் D யும். 3) A யும் E யும்.

பின்வரும் பாடலை வாசித்து 3ஆம், 4ஆம் வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

நாங்கள் புதுவித மனித குலம்!
இயந்திர வடிவில் பிறந்த இனம்!
றோபோ என்பது எங்கள் பெயர்!
மின்வலு - அதுவே எங்கள் உயிர்........

03. இப் பாடலைப் பாடுவது எது?
1) மனிதன். 2) மின்சாரம். 3) றோபோ.

04. இதன் உயிர் எது?
1) மின் வலு. 2) கணினி. 3) றோபோ.

05. பிறந்தும் பறவையின் கீழ் கோடிடுக.



1) 2) 3)

06. கீழ் தரப்பட்ட உருக்களில் ஒன்றின் இளைமயதை பிள்ளை என்று அழைப்பர். அவ் உருவின் கீழ்க் கோடிடுக.




1) 2) 3)

07. "வறுமையிலும் செம்மையாக வாழவேண்டும்" என்பதை உணர்த்தும் பழமொழி எது?
1) இரக்கப் போனாலும் சிறக்கப் போ. 2) கடனில்லாக்கஞ்சி கால் வயிறு போதும்.
3) கந்தையானாலும் கசக்கிக் கட்டு.

05. கரனும், பாலாவும் எந்நேரம் பார்த்தாலும் சண்டை பிடித்துக்கொண்டே இருப்பார்கள். அவர்கள் எந்நேரமும் ஒன்றாக இருந்ததே இல்லை. அப்படி இருவரும் அருகருகே இருந்தால் இருவருக்குமிடையே சண்டை மூண்டுவிடும். இந் நிலைமையை நன்கு வெளிப்படுத்துவது,
1) கீரியும் பாம்பும் போல. 2) ஓடும் புளியம்பழமும் போல.
3) நகமும் சதையும் போல.

பின்வரும் உருக்களை அவதானித்து 9ஆம், 10ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.





09. முதலாம் இலக்கத்திற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள இலக்கம் யாது?
1) 3 2) 2 3) 4

10. இலக்கம் 3 இற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள இலக்கம் யாது?
1) 4 2) 5 3) 6

பின்வரும் கணிதச் செய்கைகளை அவதானித்து 11ஆம், 12ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

| A + C = 06 | B - C = 01 | A - C = 02 |
|---|---|---|

11. A + B யின் பெறுமானம் யாது?
1) 7 2) 6 3) 3


12. B + C யின் பெறுமானம் யாது?
1) 3 2) 4 3) 5

13. w I u d என்னும் சிங்கள எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடியினூடாகப் பார்க்கும் பொழுது தோன்றும் மிகச் சரியான தோற்றத்தின் கீழ்க் கோடிடுக.
1) b u I w 2) ʁ ʇ ʊ q 3) P I n ʍ

14. இவ்வுருவில் உள்ள முக்கோணிகள் எத்தனை?
1) 7 2) 8 3) 9



15 தொடக்கம் 17 வரையான வினாக்களிற்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள வரைபைப் பயன்படுத்துக. இவ் வரைபு விமல், குமரன் ஆகியோர் வைத்திருந்த மாபிள்களின் எண்ணிக்கையையும் அவற்றின் நிறங்களையும் காட்டுகின்றன.





15. குமரன் கூடுதலாக எந்த மாபிள்களை வைத்திருந்தான்?
1) மஞ்சள். 2) நீலம். 3) சிவப்பு.

16. விமலும் குமரனும் எந்த மாபிள்களை ஒரேயளவாக வைத்திருக்கின்றனர்?
1) பச்சை. 2) மஞ்சள். 3) வெள்ளை.

17. விமலிடமுள்ள மொத்த மாபிள்கள் எத்தனை?
1) 50 மாபிள்கள். 2) 75 மாபிள்கள். 3) 100 மாபிள்கள்.

தரம்-5 வகுப்பொன்றில் காற்பந்தாட்டம், கிரிக்கெட், கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களை விளையாட விரும்புவோர்களின் விபரத்தைக் அருகில் உள்ள படம் காட்டுகின்றது. அதனை அடிப்படையாகக் கொண்டு 15-20 வரையான வினாக்களுக்கு விடை தருக.




15. காற்பந்தாட்டமும், கிரிக்கெட்டும் மட்டும் விளையாட விரும்பும் மாணவர்கள் எத்தனை பேர்?
1) 3 பேர். 2) 9 பேர். 3) 15 பேர்.

19. மூன்று விளையாட்டுக்களையும் மட்டும் விளையாட விரும்பும் மாணவர்கள் எத்தனை பேர்?
1) 23 பேர். 2) 12 பேர். 3) 6பேர்.

20. கிரிக்கெட் விளையாட விரும்பாத மாணவர்கள் எத்தனை பேர்?
1) 10 பேர். 2) 2 பேர். 3) 5 பேர்.


21. மதன், கஜன், கயல்விழி, மேனகா ஆகியோர் ஒரே குடும்பத்தில் உள்ள பிள்ளைகள். மதன் கஜனிலும் மூத்தவன். மேனகாவின் அக்கா கயல்விழி ஆவாள். கயல்விழி மதனுக்கு இளையவள். மேனகா கஜனின் தங்கை. குடும்ப நிலைக்கேற்ப கஜனின் நிலை யாதாக இருக்கும்?
1) மூத்தவன். 2) இரண்டாம்பிள்ளை.
3) இரண்டாம் அல்லது மூன்றாம் பிள்ளை. 4) மூன்றாம் அல்லது நான்காம் பிள்ளை.

PINEAPPLE என்ற சொல் "453314473" என்ற இலக்கங்களால் குறிப்பிடப்பட்டுள்ளதெனின்,

22. "NINE" என்ற சொல்லைக் குறிக்கும் இலக்கம் யாது?
1) 5553. 2) 5355. 3) 5734.


23. "PEN" என்ற சொல்லைக் குறிக்கும் இலக்கம் யாது?.
1) 553. 2) 743. 3) 435.

தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து 24ஆம், 25ஆம் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.





24. இங்கு அதிக தடவை வந்துள்ள உரு எது?




1) 2) 3)

25. இங்கு ஒரே அளவாகக் காணப்படும் உருக்கள் எவை?



1) 2) 3)


26. கடதாசியை இரண்டு தடவை மடித்து உருவில் காட்டியவாறு வட்டவடிவான துவாரங்கள் இட்டதன் பின்னர் கடதாசி விரித்துப் பார்க்கப்பட்ட போது அது தோற்றமளிக்கும் விதத்தைக் குறிக்கும் படத்தின் கீழ்க் கோடிடுக.



1) 2) 3)


27ஆம், 28ஆம் வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள எண்கோலங்களை நன்கு அவதானித்து புள்ளிக்கோட்டில் வரவேண்டிய எண்ணின் கீழ்க் கோடிடுக.

27.




1) 15 2) 20 3) 17

28.



1) 10 2) 12 3) 15

பெட்டியில் தரப்பட்டுள்ள கணிதச்செய்கையைக் கவனத்தில் கொண்டு 29ஆம், 30ஆம் வினாக்களுக்கு விடை தருக.




29. ○ இன் பெறுமானம் யாது?
1) 6. 2) 5. 3) 4.

30. □ இன் பெறுமானம் யாது?
1) 4. 2) 5. 3) 6.


இல. 31 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு புள்ளிக்கோட்டின் மீது விடை எழுதுக.

31. சிவா, ராஜன், மாலா, குமார் ஆகியோர் மதியபோசனம் ஒன்றுக்காக சதுரவடிவான மேசை ஒன்றைச் சுற்றி அமர்ந்திருந்தனர். சிவாவிற்கு எதிர்பக்கத்தில் குமார் அமர்ந்திருந்தான். குமாருக்கு வலப்பக்கத்தில் மாலாவும், சிவாவிற்கு வலப்பக்கத்தில் ராஜனும் அமர்ந்திருந்தனர். ராஜனுக்கு இருபக்கமும் அமர்ந்திருந்தவர்கள் யாவர்? (.................................)

32. மகனின் வயதைப்போல் மூன்று மடங்கு தாயின் வயது. மகனின் வயதின் அரைவாசியின் ஏழு மடங்கு தந்தையின் வயது. தந்தையின் வயது 42 எனின், தாயின் வயது யாது? (.................................)

33. பின்வரும் ஆங்கில எழுத்துக்களில் செங்கோணம் கூடுதலாகக் காணப்படும் ஆங்கில எழுத்துக்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுக. F B H X L J Z (.................................)


வீட்டு மதில் ஒன்றுக்காக அடுக்கப்பட்ட செங்கற்கள் இங்கே தரப்பட்டுள்ளன. ஒரு செங்கல்லின் அகலம் 5 CM ஆகும். இதன்படி 34ஆம், 35ஆம் வினாக்களுக்கு விடை தருக.



34. இம்மதிலுக்குப் பயன்படுத்தப்பட்ட முழுச் செங்கற்கள் எத்தனை?
(.................................)

35. மதிலின் உயரம் யாது? (.................................)

36. தரப்பட்டுள்ள நேரத்தை கடிகார முகத்தில் குறித்துக்காட்டுக.





37ஆம், 38ஆம் வினாக்களில் தரப்பட்ட வாக்கியங்கள் உரிய முறையில் சொற்கள் பிரித்தெழுதப்படவில்லை. அவற்றை சரியான முறையில் பிரித்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

37. அவ் நாய்பசு நூம்தம ய்பாடுபட் டுஉழைக் கவேண் டும்.
...........................................................................................

38. உட லின்உறு தி உடை ய வரேஉல கில்இன் பம்உடை ய வராவர்.
...........................................................................................

தரப்பட்டுள்ள உருவை அவதானித்து 39ஆம் வினாவிற்கு விடை தருக.

39. தரப்பட்டுள்ள உருவில் பரப்பளவில் பெரிய உரு யாது?
(.................................)




40. பண்ணை ஒன்றில் கோழிகளும் ஆடுகளும் வளர்க்கப்பட்டன. ஆடுகளின் எண்ணிக்கையை விட இரண்டு மடங்கு கோழிகளின் எண்ணிக்கை ஆகும். இரண்டு பிராணிகளினதும் கால்களின் எண்ணிக்கை 112 ஆகும். இப்பண்ணையில் வளர்க்கப்பட்ட கோழிகள் எத்தனை?
(.................................)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II

மாணவர் சுட்டெண்:- .......................... நேரம்:- 1மணித்தியாலம் 15 நிமிடங்கள்

01. கீழே தரப்பட்ட பாடலை வாசிக்குக.

1) வண்ணக் கிளி போல் பறந்திட ஆசை!
வானத்து நிலவாய் ஒளிதர ஆசை!
கன்னல் தமிழைக் கற்றிட ஆசை!
கடலில் மீனாய் நீந்திட ஆசை!

2) மலர்களைப்போல மணம்தர ஆசை!
மலைமேல் மலைமேல் ஏறிட ஆசை!
தளர்வோர்க் கென்றும் உதவிட ஆசை!
தாய்போல் அன்பைப் பொழிந்திட ஆசை!

3) கடமையை உணர்ந்து செயற்பட ஆசை!
கடின உழைப்பில் வென்றிட ஆசை!
மடமையைக் கொழுத்த மனதில் ஆசை!
மனிதனாய் வாழ்ந்து புகழ் பெற ஆசை!

பாடலடிகளைக் கொண்டு 01 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

01) கவிஞர் யாருக்கு உதவிட ஆசை எனக் கூறுகிறார்? ..........
02) இப்பாடலில் காணப்படும் பெயரடை மொழி இரண்டு தருக? ..........
03) புகழைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும்? ..........
04) மீனின் இயல்பை எவ்வாறு அமைப்பர்? ..........
05) கடின உழைப்பு என்பதைப்பிரித்து எழுதுக? ..........
06) தாயிடமிருந்து நாம் எவற்றைப் பெறலாம்? ..........
07) நாம் மனதிலிருந்து எவற்றை அகற்ற வேண்டும்? ..........
08) உயர்திணை, பன்மை, படர்க்கைச் சொல் ஒன்று தருக? ..........
09) கடமை என்பதன் ஒத்தசொல் யாது? ..........
10) "புகழ்" என்பதன் எதிர்ச்சொல் யாது? ..........

02. பின்வரும் வாக்கியங்களில் உள்ள வழுக்களைத் திருத்தி மீண்டும் எழுதுக?
1) தாயின் அன்பைப்போல் வேறு எதுவுமில்லை.
..........
2) மரங்கள் வேருடன் பிடுங்கி எறியப்பட்டன.
..........

03. பின்வரும் உவமைத் தொடரை வைத்து பொருத்தமான வாக்கியம் அமைக்குக.
1) ஓடும் புள்ளிமான்போல ..........
2) வலையில் சிக்கிய மான் போல ..........

04. பின்வரும் கருத்தை வெளிப்படுத்தும் பழமொழிகளை எழுதுக.
1) சேமிப்பு செய்வதன் முக்கியத்துவம் ..........
2) ஒருமை பலம் தரும். ..........

05. வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

1) I can see a beautiful .......... (Parrot, Fish, Goat) in the bond.

2) பின்வரும் உருக்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை எழுதுக.

01.  ..........

02.  ..........

06. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் தருக.
1) Hoppers - ..........
2) Aeroplane - ..........
3) Waterfall - ..........

07. வெற்றிடங்களுக்கு பொருத்தமான சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் தருக.




1) ..........
2) ..........
3) ..........

08. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் தருக.
1) Tid Uak - ..........

**9ஆம் வினா தொடக்கம் 27 ஆம் வினாவரை சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

09. மிகச் சிறிய விதைகளில் ஒன்று,
1) சோளம். 2) கோப்பி. 3) அவரை. 4) கடுகு.

10. ஓர்கிற் பூ பூக்கும் மாதம்,
1) வைகாசி. 2) தை. 3) ஆடி. 4) கார்த்திகை.

11. சூழலுக்கேற்ப தன் உடலின் நிறத்தை மாற்றிக் கொள்வது,
1) அட்டை. 2) மண்புழு. 3) வெட்டுக்கிளி. 4) தவளை.

12. தாமரை இலைகளில் தன் இருப்பிடத்தை அமைத்துக் கொள்ளும் பறவை,
1) செம்பகம். 2) தையற்பறவை. 3) மரக்கொத்தி. 4) அணில்.

13. கையில் உள்ள பசைக்கறைப்பாலை அகற்றப்பயன்படுவது,
1) பெற்றோல். 2) தேங்காய்எண்ணெய். 3) மண்ணெண்ணெய். 4) உசல்.

14. கொப்பி, புத்தகங்களைத் தாக்கும் பூச்சி,
1) இராமபாணம். 2) தத்துவெட்டி. 3) மூட்டைப்பூச்சி. 4) எறும்பு.



15. மரவள்ளிக் கிழங்கு சாப்பிட்ட பின் உண்ணக்கூடாத பொருள்,
1) வெந்தயம். 2) இஞ்சி. 3) வெங்காயம். 4) உள்ளி.

16. அம்மை நோய் ஏற்பட்ட ஒருவரை எந்தத்தாவர இலையின்மேல் படுக்க வைப்பர்?
1) வாழையிலை. 2) ஆலம்இலை. 3) அரசயிலை. 4) வேப்பிலை.

17.  இவ் உபகரணத்தை பயன்படுத்துபவர்,
1) சாரதி.
2) குயவன்.
3) வைத்தியர்.
4) கொல்லன்.

18. அருகிலுள்ள உடுத்தொகுதியின் பெயர்,


1) பெரும்கரடி.
2) பெருநாய்.
3) ஓரியன்.
4) சிறுகரடி.

19. வலைப்பந்தாட்ட விளையாட்டில் பங்குகொள்ளும் வீரர்களின் எண்ணிக்கை,
1) 7 வீரர்கள். 2) 11 வீரர்கள். 3) 12 வீரர்கள். 4) 16 வீரர்கள்.

20. காசுக்கட்டளையை அனுப்ப நாம் செல்ல வேண்டியது,
1) வங்கி. 2) தபாலகம்.
3) கம்பனி. 4) கிராமசேவகர் அலுவலகம்.

21. இலங்கையின் தேசிய இலச்சினையில் காணப்படும் கலசம் குறிப்பது,
1) தூய்மை. 2) தர்மமும் நீதியும். 3) உலகநிலைப்பாடு. 4) செளபாக்கியம்.

22. பயிர்களுக்கு சேதம் விளைவிக்காத பூச்சிகளில் ஒன்று,
1) அந்துப்பூச்சி. 2) கும்பிடுபூச்சி. 3) வெட்டுக்கிளி. 4) செதிட்பூச்சி.

23.  இவ் உபகரணத்தின் பெயர் யாது?
1) பாரமானி.
2) மழைமானி.
3) காற்றுவேகமானி
4) காற்றுத் திசைக்காட்டி.


24. அலங்காரத்திற்குப் பயன்படும் தையல்களில் ஒன்று,



25. அருகிலுள்ள உபகரணத்தின் பெயர்,

1) ஆணித்திருகு. 2) துரப்பணம்.
3) உளி. 4) முடித்திறப்பான்.

26.  இவ் உபகரணத்துடன் தொடர்புடைய வாகனம் எது?
1) துவிச்சக்கரவண்டி. 2) கார்.
3) லொறி. 4) மோட்டார் சைக்கிள்.

27. ஆந்தையின் நிழலைக் குறிப்பது,



இலங்கையின் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த கலைத்துவப் படைப்புக்களின் படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அடைப்புக்குள் தரப்பட்ட பெயர்களிடையே ஒவ்வொரு படத்திற்குமுரிய பெயரைத் தெரிவு செய்து உரிய புள்ளிக்கோட்டில் எழுதுக.

**பொலன்னறுவைச் சிவன்கோயில், தலதா மாளிகை, மகாபோதி, பராக்கிரமபாகு, அபயகிரி, கம்பளை இலங்காதிலக விகாரை, சிகிரியா ஓவியங்கள்.**

28.  __________

29.  __________

30.  __________

31.  __________


சில வித்துக்களின் படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அடைப்புக்குள் தரப்பட்டுள்ள பெயர்களிடையே சரியான பெயரைத் தெரிவு செய்து உரிய புள்ளிக்கோட்டில் எழுதுக.


**சீதேவியார் செங்கழுநீர், முருங்கை, ஆச்சி, வேங்கை, பெரு, முக்கிறைச்சி, ஆமணக்கு**


32.  __________

33.  __________

34.  __________

35.  __________

36. உருவில் காணப்படும் திண்மத்தில் உள்ள,

1) முகங்கள் எத்தனை? ..........
2) உச்சிகள் எத்தனை? ..........

37. சதுர வடிவான காணித்துண்டின் பரப்பளவு 225m² ஆகும். எனின், A யிலிருந்து B வரை நடந்துசெல்வதற்கு எத்தனை மீற்றர் தூரம் நடக்கவேண்டியிருக்கும்?


..........

38. அரிசி மூட்டைகளை ஏற்றியபின் லொறி ஒன்றின் நிறை 6500Kg 850g. அரிசி மூட்டைகளின் மொத்த நிறை 2700Kg 900g எனின், லொறியின் நிறை யாது? ..........




39. 1) இவ்வுருவை உருவாக்க பயன்படுத்தப்பட்ட சிறியசதுரமுகிகள் எத்தனை?


..........
2) சிறிய சதுரமுகி ஒன்றின் ஒரு பக்க நீளம் 1cm எனின், திறந் திட்டப்பட்ட முகத்தின் பரப்பளவு யாது? ..........

40. 400l கொள்ளளவு கொண்ட தண்ணீர் தாங்கி ஒன்றை நீர்ப்பம்பியால் நிரப்புவதற்கு 20 நிமிடங்கள் எடுக்கும் எனின், 1l நீர் நிரப்ப எவ்வளவு காலம் எடுக்கும்? ..........

41. தரம் 5 வகுப்பில் 198 மாணவர்களை நிகழ்ச்சி ஒன்றுக்காக 6 குழுக்களாக ஆசிரியர் பிரித்தார். எனவே, ஒரு குழுவில் எத்தனை மாணவர்கள் இடம்பெற்றிருப்பார்கள்? ..........

42. அருகிலுள்ள உருவில் தரப்பட்டுள்ள அளவுகளுக்கேற்ப சுற்றளவுகளைக் காண்க? ..........




43. கொழும்பிலிருந்து வவுனியாவிற்கு ரயிலில் பயணம் செய்ய மொத்தமாக 7 மணித்தியாலங்கள் எடுக்கும். கொழும்பிலிருந்து வவுனியாவிற்கு செல்லும்போது இந்த ரயில் மாகோவில் 25 நிமிடங்களும், அநுராதபுரயில் 40 நிமிடங்களும் தரித்து நின்று பிரயாணத்தை மேற்கொள்ளும். எனின், கொழும்பிலிருந்து ரயில் ஒரு இடமும் தரித்து நிற்காது தொடர்ந்து பிரயாணத்தை மேற்கொள்ளும் எனின், எத்தனை மணித்தியாலங்கள் எடுக்கும்? ..........

44. 



உருவில் குறிப்பிடப்பட்டுள்ள நீளமுள்ள பென்சிலைக் நான்கு சமதுண்டுகளாக வெட்டப்பட்டது. எனின், ஒரு சிறிய துண்டின் நீளம் எவ்வளவு? ..........

யாழ். மாவட்டத்தில் ஒரு பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கடந்த ஐந்து வருடங்களில் சித்தியடைந்தவர்களின் விபரங்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது. அதன்படி 45 தொடக்கம் 48 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.


| வருடம் | சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2003 | 7 |
| 2004 | 11 |
| 2005 | 15 |
| 2006 | 19 |
| 2007 | 23 |




45. இறுதி மூன்று வருடங்களில் சித்தியடைந்தோர் எத்தனை பேர்? ..........
46. ஒவ்வொரு வருடமும் எத்தனை மாணவர்கள் கூடுதலாக சித்தியடைகின்றனர்? ..........
47. இதன்படி 2008 ஆம் ஆண்டு எத்தனை மாணவர் சித்தி அடைவர் என எதிர்வுகூற முடியும்? ..........
48. அட்டவணையில் தரப்பட்ட முதல் நான்கு வருடங்களிலும் சித்தியடைந்த மாணவர்களின் விபரத்தை நிரல் வரைபில் வரைக.

49. உருவில் நிழற்றப்பட்ட பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக?

..........

50. தரப்பட்டுள்ள எண் சட்டங்களின் தொடர்பை அவதானித்து அடுத்துவரும் எண் சட்டத்தை வரைக.




இரவு முழுவதும் நித்திரையே வரவில்லை. காலை ஐந்து மணிக்கே எழும்பி அம்மாவை எழுப்பி தேநீர் வைக்கும்படி கூறிவிட்டு குளிக்கச் சென்றேன். குளித்துவிட்டு தேநீர் குடித்தேன். சீக்கிரமாகப் பாடசாலைச் சீருடை அணிந்து கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டு பாடசாலை செல்வதற்காகத் தயாரானேன். அப்பொழுது அம்மா, "இன்று புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின்றன. கண்ணன் பதற்றத்துடன் காணப்படுகின்றான். அவனைப் பாடசாலைக்கு கூட்டிச்செல்லும்போது அருகில் உள்ள கோயி லுக்கு அழைத்துச்சென்றுவிட்டு பாடசாலைக்குக் கூட்டிச்செல்லுங்கள்" என்று அப்பாவிடம் கூறுவது எனது காதில் விழுந்தது. பாடசாலை சென்று பரீட்சைப் பெறுபேறைப் பார்த்தபொழுது எனது பெயருக்கு நேரே 166 புள்ளிகள் என இருந்தது. மாவட்டத்தில் முதலாமிடம் என அதிபர் கூறி எனக்குக் கைகொடுத்த போது.....

நீர்தான் அந்தக் கண்ணன் எனக் கொண்டு அடுத்து உங்கள் மனதில் தோன்றும் எண்ணங்களை ஆறு வாக்கியங்களில் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்தையும் எழுவாய், பயனிலைத் தொடர்புள்ளதாகவும் நான்கு சொற்களுக்குக் குறையாத மற்றும் கருத்துள்ள வாக்கியமாகவும் எழுதுக.)

51. ..........
52. ..........
53. ..........
54. ..........
55. ..........
56. ..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org